# களத்தில்

06.09.2001

242

தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கிவரும் செய்தித்தாள்




எமது எதிரியோ சமாதான அணுகுமுறையை ஒரு அரசியல் பொறியாகக் கையாள விரும்புகிறான். எனவே எதிரியின் தந்திரோபாயத்தையிட்டு நாம் மிகவும் விழிப்பாக இருக்கவேண்டும்.

தமிழீழத் தேசியத் தலைவர்
மேதகு வே.பிரபாகரன் அவர்கள்

உள்ளே...


3 ஒரு கை கட்ட... மறு கை இடிக்கும்

4 ஒரு முற்றுகைச் சமரும், வெற்றி கொள்ளப்பட்ட விதமும்.

6 தென் ஆபிரிக்காவில் இன வேறுபாட்டுக்கு எதிரான மகாநாடு

9 கட்டுநாயக்க மீதான தாக்குதல் எம்மைத் தட்டி எழுப்பியிருக்கின்றது.


# ஆட்சியைக் காப்பாற்ற போர்நிறுத்தமும் ஒரு ஆயுதம் (?)

**போர் நிறுத்தத்தை ஆட்சியைத் தக்கவைக்கும் ஆயுதமாக்க நினைத்த சந்திரிகா அரசு.**

**பலமற்ற அரசுடன் போர்நிறுத்தம் செய்வதும் பேசுவதும் அர்த்தமற்ற காரியம் என பதிலிறுத்த விடுதலைப் புலிகள்.**

28.08.2001 அன்று, சிறீலங்காவின் ஆளும் பொதுசன ஐக்கிய முன்னணிக்கும் எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையில், மூன்று நாட்களாக நடந்த பேச்சுவார்த்தை தோல்வியில் முடிவடைந்தது. மறுநாள் 29ம் திகதி, சிறீலங்காவின் வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர், விடுதலைப் புலிகளுடன் போர்நிறுத்தம் செய்வதற்கு அரசு தயாராக இருப்பதாகவும், நேரடிப் பேச்சுவார்த்தை ஒன்றிற்காக விடுதலைப் புலிகளை அழைப்பது குறித்து அரசு ஆராய்ந்து வருவதாகவும் திடீரென அறிவித்தார். சந்திரிகா அரசின் இந்தத் திடீர் அறிவித்தல் அனைத்துத் தரப்பினரையும் வியப்பில் ஆழ்த்தியது. விடுதலைப் புலிகள் இவ்வாண்டின் தொடக்கத்தில் அறிவித்த ஒருதலைப்பட்ச போர்நிறுத்தத்தை அலட்சியப்படுத்தி, கேலி பேசி, புறந்தள்ளிவிட்டு, போர் நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்திய சந்திரிகா அரசு, திடீரென, அதிலும் ஆட்சி கவிழக்கூடிய சூழ்நிலை ஏற்பட்ட நிலையில் இவ்விதம் அறிவித்தமை வியப்பிற்குரிய விடயம் என்பதுடன், சந்திரிகா அரசின் போலித் தனமான கபடத்தை புலப்படுத்தியது.

சிறீலங்கா அரசின் யுத்த முன்னெடுப்புக்கள், ஆத்திரமூட்டும் செயற்பாடுகள், அழிவு நடவடிக்கைகளுக்கு மத்தியில், நோர்வேயின் சமாதான முயற்சிக்கு வழியேற்படுத்தும் வகையில் விடுதலைப் புலிகள் நான்கு மாதங்களாக ஒருதலைப்பட்ச போர்நிறுத்தத்தை தொடர்ந்து இறுக்கமாகக் கடைப்பிடித்து வந்தனர்.

அப்போது சமாதான வழிக்கு வராத சந்திரிகா அரசு, திடீரென போர்நிறுத்தத்திற்குத் தயாராக இருப்பதாகவும் சமாதானப் பேச்சுவார்த்தை குறித்த ஆர்வத்தையும் தற்போது வெளியிட்டிருந்தது.

சந்திரிகா அரசின் இந்தக் கபட நாடகத்தைப் புரிந்து கொண்டு, விடுதலைப் புலிகள் மறுநாளே போர்நிறுத்த யோசனையை நிராகரித்து அறிக்கை வெளியிட்டனர். 'மூழ்கிக் கொண்டிருக்கும் கப்பலில் ஏறிக்கொள்ள நாம் அப்படி முட்டாள்கள் அல்ல' எனத் தெரிவித்திருந்தார் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம். 'அரசாங்கத்தின் இந்த யோசனை ஒரு ஏமாற்று வித்தை' என அவர் சாடினார்.

பரஸ்பரம் இணக்கப்பாடு கண்டு போர்நிறுத்தமும் அதனைத் தொடர்ந்து பேச்சுவார்த்தையும் என சிறீலங்கா அரசாங்கம் விடுத்த அழைப்பை நிராகரித்து விடுதலைப் புலிகளால் விடுக்கப்பட்ட அறிவித்தலில், இந்த அழைப்பின் பின்னால் இருக்கக்கூடிய சூழ்ச்சித் திட்டங்களை விடுதலைப் புலிகள் தோலுரித்தனர்.

'தீவிரமடைந்துவரும் அரசியல் நெருக்கடியிலிருந்து சிங்கள மக்களதும் சர்வதேச சமூகத்தினதும் கவனத்தைத் திசை திருப்பும் நோக்கிலேயே இந்த சமாதானத்திற்கான சமிக்ஞை காட்டப்படுகிறது. பாராளுமன்றத்தில் பெரும்பான்மையை இழந்து, ஊழலும், சீர்கேடும் மலிந்து ஆட்டம்கண்டும் நிலையிலுள்ள இந்த அரசாங்கத்துடன் நாம் பேச்சுக்களை நடத்தத் தயாராக இல்லை' இவ்வாறு விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் திரு. அன்ரன் பாலசிங்கம் அவர்கள், சிறீலங்கா அரசின் போர்நிறுத்த யோசனையை நிராகரித்து விடுத்த செய்தியில் குறிப்பிட்டிருந்தார்.

'சந்திரிகா குமாரதுங்காவின் அரசாங்கம் நீண்ட காலமாக, தொடர்ச்சியாக எமது சமாதான முயற்சிகளை எதிர்த்து வந்தது. இராணுவவாதத்திலும், தமிழர் நிலங்களை விழுங்கும் படையெடுப்புக்களிலும் நம்பிக்கை கொண்டிருந்தது. போர்நிறுத்தம் கோரி நாம் விடுத்த அழைப்புகளை நிராகரித்துவந்தது. ஆனால் இப்பொழுது ஒரு மோசமான அரசியல் நெருக்கடியைச் சந்தித்து நிற்பதால் இந்த அரசாங்கம் ஆட்சி அதிகாரத்தில் தொடர்ந்து இருப்பதற்காக இக்கட்டான வழிமுறைகளைக் கடைப்பிடிக்க முயல்கின்றது' என, திரு. பாலசிங்கம் அவர்கள், சந்திரிகா அரசின் போர்நிறுத்த யோசனையின் பின்னால் விரிந்து கிடக்கும் சுயஅரசியல் லாபநோக்கம் குறித்து பகிரங்கப்படுத்தினார்.

சந்திரிகா அரசைக் கவிழ்க்கும் முயற்சியில், ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து நிற்கும் தமிழ்க்கட்சிகளை, ஆட்சிக்கெதிரான கூட்டணியில் இருந்து பிரித்தெடுக்கும் நோக்கில், அரசாங்கம் இந்த அரசியல் நாடகத்தை அரங்கேற்ற முயல்கின்றது என்றும் திரு. பாலசிங்கம் தனது அறிக்கையில் குறிப்பிட்டிருந்தார்.

சந்திரிகா அரசின் இந்த ஏமாற்றுவித்தை, ஒரு நாளிலேயே பயனற்றுப் போன நிலையில், தமிழ்க்கட்சிகளை பிரித்தெடுக்க எடுத்த முயற்சி பயனற்றுப்போன நிலையில், மீண்டும் ஜே.வி.பி.யினருடன் கைகோர்த்திருக்கின்றது சந்திரிகா அரசு.

போர்நிறுத்தம், பேச்சுவார்த்தை என்ற நிலைப்பாட்டுக்கு நேரெதிரானதான அணியொன்றுடன் சந்திரிகா அரசு தற்போது கூட்டணி அமைத்திருக்கின்றது. இவையாவும் இரண்டு மூன்று நாள் இடைவெளியில் நடைபெற்ற அரசியல் கூத்துக்கள்.



"சிறீலங்காவில் எந்தவொரு பேரினவாதக் கட்சிகளிடமும் தற்போது பலமான அரசியல் தலைமைகள் இல்லை. எந்த அரசாங்கம்தான் ஆட்சிபீடம் ஏறினாலும் பலவீனமடைந்துள்ள இத்தலைமைகளினால் பேச்சுவார்த்தை மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியாது"

விடுதலைப் புலிகளின் மட்டு, அம்பாறை அரசியற்துறைப் பொறுப்பாளர் கரிகாலன் அவர்களது பேட்டி உள்ளே...

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**


தமிழீழ ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

# விடுதலைப் புலிகளுடன் பேசி சமாதானத் தீர்வைக் காண். கட்டளையிடுவது காலம்.



இரண்டு பேரினவாத சக்திகள் கைகோர்த்திருக்கின்றன. இலங்கைத்தீவில் பற்றி எரிகின்ற பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண்பதற்குப் பதிலாக, சந்திரிகா அரசின் ஆட்சிக்கு ஏற்பட்ட பாரதூரமான நெருக்கடியைத் தீர்த்துவைக்க, ஜே.வி.பி. யினர் தக்க தருணத்தில் கைகொடுத்து உதவியிருக்கின்றனர்.

அரசுக்கெதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையை, எதிர்க்கட்சிகளுடன் சேர்ந்து முன்வைத்த ஜே.வி.பி. யினர், சிறீலங்கா சனாதிபதி சந்திரிகாவுடன் நடத்திய பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து, எதிரணியில் இருந்து மெல்ல நழுவி, ஆளும் கட்சியுடன் ஐக்கியமாகிவிட்டனர்.

ஆட்சியைக் காப்பாற்ற எந்தப் பிசாசுடனும் கூட்டுச்சேர தயாராக இருப்பதாக அறிவித்திருக்கும் சிறீலங்கா சனாதிபதி சந்திரிகா, ஜேவிபியினரின் நிபந்தனைகள் பலவற்றை ஏற்றுக்கொள்வதாக அறிவித்திருக்கின்றார்.

பொதுச்சேவை, பொலிஸ், நீதித்துறை, மற்றும் தேர்தல் ஆகிய துறைகளுக்கு சுதந்திர ஆணைக் குழுக்களை நியமிப்பது, புதிய அரசியலமைப்புச் சட்டவாக்கம் குறித்து பொதுமக்கள் கருத்தறியும் வாக்கெடுப்பை ரத்துச்செய்வது, தகுதிகாண் அரசுக்காக ஜேவிபியினரால் ஆதரவு வழங்கப்பட இருக்கும் ஒருவருட காலப்பகுதியில் தனியார் மயமாக்கல் எதனையும் மேற்கொள்ளாமல் இருப்பது என நீண்டு கொண்டு செல்கின்றது சந்திரிகாவின் உறுதிமொழிகளின் பட்டியல்கள்.

ஏற்கெனவே, சந்திரிகாவின் உறுதிமொழிகளை நம்பி ஏமாந்த ஜே.வி.பியினருக்கு, இப்புதிய உறுதிமொழிகள் குறித்து நம்பிக்கைகள் எழுந்திருப்பது விசித்திரமாகப்படுகின்றது. 1994ம் ஆண்டு தேர்தல் காலத்தில் சந்திரிகா வழங்கிய எந்த உறுதிமொழிகளும் இதுநாள் வரை நிறைவேற்றப்படவில்லை என்பதையும், ஜே.வி.பி யினர் தீவிரமாய் வலியுறுத்திவரும் சனாதிபதி ஆட்சி முறை ஒழிப்பை ஏழாண்டுகளாக சிறீலங்கா சனாதிபதி சந்திரிகா மேற்கொள்ளவில்லை என்பதுடன், அதனை இறுகப்பற்றிப் பிடித்து, தனது அரசியல் அஸ்தமனத்தை தடுத்து நிறுத்துவதில் தற்காலிகமாக வெற்றியும் கண்டிருக்கின்றார் என்பதையும்கூட ஜே.வி.பியினர் வசதியாக புறந்தள்ளியிருக்கின்றனர்.

தமக்கு வழங்கிய உறுதிமொழிகளை, சந்திரிகா அரசு நிறைவேற்றும் என நம்புகின்றோம். இல்லாது போனால், தனித்து நின்று போராடுவோம் என, ஜே.வி.பியினர் வலுக்குறைந்த முறையில் சபதம் செய்கின்றனர்.

குழம்பிய குட்டையில் மீன்பிடிக்கும் பாணியிலான, ஜே.வி.பியின் நடவடிக்கைகள், அதன் அடுத்த தேர்தல்கால பிரச்சாரத்தை மையமாகக் கொண்டே அமைகின்றன. விவசாயிகளுக்கான கடனுதவிகளை மீளப்பெறாமல் அதனை அப்படியே ரத்துச்செய்துவிடுவது. ஏழைமக்களுக்கான கடனுதவிகளின் வட்டிகளை ரத்துச்செய்வது போன்ற பல கோரிக்கைகளை ஜே.வி.பி. முன்வைக்கின்றது.

இது வறுமைக்கோட்டிற்குக் கீழ் வாழும் சிங்கள மக்களைக் குறிவைத்து நடத்தப்படுகின்றன பிரச்சார நோக்கிலான நடவடிக்கை என்றே கருதப்படுகின்றது.

சிங்களப் பேரினவாதிகளை தம்வசமிழுக்கவும் ஜே.வி.பியினர், இந்த அரசியல் நெருக்கடியைப் பயன்படுத்திக்கொண்டுள்ளனர்.

சந்திரிகா அரசுக்கு ஒரு வருடகாலத்திற்கு ஆதரவு நல்குவதாக வாக்குறுதியளித்த ஜே.வி.பி. இயக்கம், விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தக் கூடாது என சந்திரிகா அரசை வலியுறுத்துகின்றது. அத்துடன் அதிகாரப் பகிர்வு எதனையும் மேற்கொள்ளக்கூடாது எனவும் அது நிபந்தனை விதித்துள்ளது.

ஜே.வி.பியினரின் இந்த நடவடிக்கைகள், பௌத்த சிங்களப் பேரினவாதிகளை மிகவும் கவர்ந்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

விடுதலைப் புலிகளுடன் பேசக்கூடாது, போரைத் தீவிரமாய்த் தொடர்ந்து நடத்தவேண்டும், தமிழ்மக்களுக்கு எந்த உரிமையும் வழங்கக்கூடாது என்று வலியுறுத்திவரும் பௌத்த சிங்களப் பேரினவாதிகளின் கொள்கையுடன், இடதுசாரி சிந்தனாவாதிகள் என, தமக்குத் தாமே பெயர் சூட்டிக்கொண்டு, பேரினவாதக் கடும்போக்குக் கருத்துக்களுடன் அலைகின்ற ஜே.வி. பியினர் நன்கு ஒத்துப்போகின்றனர்.

விடுதலைப் புலிகளுடன் பேசக்கூடாது, தமிழ்மக்களுக்கு அதிகாரங்கள் வழங்கப்படக்கூடாது, போரைத் தீவிரமாக மேற்கொள்ள வேண்டும் போன்ற இனவாதச் சிந்தனையோட்டம், சந்திரிகா அரசுக்கு முரணானவை அல்ல. சந்திரிகா அரசும் இதே கருத்தையே கொண்டிருக்கின்றது. இதனை இலக்காக வைத்தே தனது, அரசியல் இராணுவ இராஜதந்திரக் காய்நகர்த்தல்களைச் செய்துவருகின்றது.

ஆனால், இதில் வித்தியாசம் என்னவெனில், இனப்பிரச்சினை தொடர்பாக சந்திரிகா அரசு மறைமுகமாக [illegible] கொள்கையை ஜே.வி. பியினர் [illegible] இருக்கின்றனர் அவ்வளவுதான்.

சமாதானம் பற்றிப் பேசிக்கொண்டு யுத்தம் செய்வதிலும், தமிழ்மக்களுக்கு உரிமைகள் வழங்கப்பட வேண்டும் எனச் சொல்லிக்கொண்டு, தமிழ்மக்களுக்கு இருக்கக்கூடிய அற்பசொற்ப சலுகைகளைக்கூட பறித்துக்கொள்ளும் கைங்கரியத்திலும் சிறீலங்கா சனாதிபதி சந்திரிகா கெட்டிக்காரி.

முன்பு ஆயுதம் தாங்கிப் போராடிய தாம் அந்தத் தவறை மீண்டும் ஒருமுறை செய்யமாட்டோம் எனப் பகிரங்கமாக அறிவித்து, தமது ஆயுதப் போராட்டத்தை மிகமோசமாக கொச்சைப் படுத்திய ஜே.வி. பியினர், தமது போராட்டப் பாதையின் அவலட்சணத்தை அம்பலப்படுத்தியிருந்தனர்.

இப்படிப்பட்டவர்களால் உறுதியான தலைமைத்துவத்தின் கீழ் தமிழ்மக்களால் நடாத்தப்பட்டுவரும் விடுதலைக்கான ஆயுதப் போராட்டத்தின் கனபரிமாணத்தைப் புரிந்துகொள்ள வாய்ப்பில்லை.

உண்மையில், விடுதலைப் புலிகளுடன் பேசவேண்டும், இனப்பிரச்சினைக்கு சமாதானப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வுகாணப்படவேண்டும் என்பதைத் தீர்மானிப்பது சிறிலங்கா சனாதிபதி சந்திரிகாவோ அல்லது ஜே.வி.பி. தலைவர்களோ அல்ல என்பதே யதார்த்தம். விடுதலைப் புலிகளுடன் பேசுமாறும், இனப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தை மூலம் விரைந்து தீர்வு காணுமாறும் காலம்தான் கட்டளையிடுகின்றது. இதனை ஆட்சிபீடத்தில் இருப்பவர்களைத் தவிர, தற்குறித்தனமாக அதிகார வெறிகொண்டு அலையும் சிங்கள அரசியல்வாதிகளைத் தவிர, இனவாதச் சாக்கடையில் நெளியும் இனவெறியர்களைத் தவிர ஏனையவர்கள் நன்கு புரிந்து கொண்டிருக்கின்றனர்.

எந்தப் பேரினவாதிகளும் யுத்தத்தை தீவிரப்படுத்தி, தமிழ்மக்களின் உரிமைக் குரலை அடக்கமுடியாதவாறு, யதார்த்தம் குறுக்கே நிற்கின்றது.

சிங்களத்தின் தலைவிதியை நிர்ணயிக்கும் சக்தி இன்று தமிழர் தரப்பிடம் சிக்குண்டு கிடப்பதை வரலாற்றுக் குருடர்களால் அறிய வாய்ப்பில்லை. ஆனால், இந்த யதார்த்தத்திற்கு அப்பால் சென்று சிங்களத் தலைவர்களைச் சிந்திக்கவும் செயல்படவும் தூண்டும், பேரினவாதச் சிந்தனைகள், அவர்களுக்கும் அவர்களது தேசத்திற்கும் அழிவையே ஏற்படுத்தும் என்பது மறுக்கமுடியாத உண்மை.

வெளிநாட்டு தலையீடுகளை, வெளிநாடுகளின் பொருளாதார விஸ்தரிப்புக்களை, பொருளாதார உதவிகளின் அடிப்படையிலான ஆலோசனைகளை, சமாதான முயற்சிகளை, மத்தியத்துவச் செயற்பாடுகளை, ஜே.வி.பியினர் காலகாலமாக எதிர்த்து வந்திருக்கின்றனர். தற்போது, சந்திரிகா அரசைத் தாங்கிப் பிடித்துக் கொண்டிருக்கும் ஜே.வி.பியினர் வெளிநாட்டுக் கடனுதவிகளை, அமெரிக்காவின் இராணுவப் பயிற்சிகளை, சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கி போன்றவற்றின் நிதியுதவிகளை கூடவே அவற்றினது ஆலோசனைகளை, சர்வதேச நாடுகளின் இராணுவ உதவிகளை வெறுத்து ஒதுக்கப்போவதில்லை. எதிர்த்துக் குரல் கொடுக்கப்போவதில்லை.

லாபம் தரக்கூடியவற்றை வரவேற்கவும், மற்றையவற்றை எதிர்க்கவும் ஜே.வி.பியினர் தற்போது கற்றுக் கொண்டுவிட்டனர்.

ஜே.வி.பியினரின் ஆதரவுடன் மீண்டும் சந்திரிகா ஆட்சி தொடர்கின்றது. ஆனால், இக்கூட்டு நீண்டகாலத்திற்குத் தொடர வாய்ப்பில்லை என்றே அரசியல் அவதானிகள் மட்டத்தில் கருத்து நிலவுகின்றது. இனப்பிரச்சினை தொடர்பான அவர்களது தீர்வு நிலைப்பாடும் நின்றுபிடிக்கச் சந்தர்ப்பம் இல்லை. காலமே இதற்குப் பதில்சொல்லும்.

■■

## நுணுக்குக் காட்டி

அரசியல் ரீதியாகவும், இராணுவ ரீதியாகவும் பல வீனமடைந்து ஆட்டங்கண்டுள்ள சந்திரிக்கா விடுதலைப் புலிகளுடன் பேசுவதற்கும், போர்நிறுத்தத்தைச் செய்வதற்கும் தயார் எனக் கூறுவது தமிழ் மக்களை ஏமாற்ற முயலும் செயலாகும்.

தமிழர் விடுதலைக் கூட்டணி பா. உ.,
ஜோசப் பரராசசிங்கம்.

இலங்கை நெருக்கடிக்கு யுத்தம் மூலம் தீர்வு காண முடியாது. பேச்சுவார்த்தை ஒன்றே தீர்வுக்கு வழி. விடுதலைப் புலிகளுடன் கலந்தாலோசனைகள் மேற்கொள்ளப்படாதவரை எந்தவொரு வெற்றிகளையும் காணமுடியாது.

'ராப்ரா' கருத்தரங்கில்
தமிழர் விடுதலைக் கூட்டணி பா. உ.
வி. ஆனந்தசங்கரி.

தென்னிலங்கையில் இருக்கின்ற கட்சிகள் யாவும் தமது தேவைக்காக, தமது கதிரைகளைத் தக்க வைத்துக் கொள்வதற்காக எதையும் செய்யத் தயாராகவே இன்று இருக்கின்றார்கள்.

ரி.பி.சி. தமிழோசையில்,
ரெலோ அமைப்புத் தலைவர், பா.உ.,
செல்வம் அடைக்கலநாதன்.

எங்களை சம பிரஜைகளாக இலங்கை அரசு கணிக்கும் என்பதில் எமக்கு இனிமேல் நம்பிக்கையில்லை. உண்மையையும், நீதியையுமே நாம் வேண்டிநிற்கின்றோம்.

தென்னாபிரிக்கா டேர்பனில்,
நடைபெற்ற கூட்டத்தில்,
ஜோசப் இம்மானுவேல் அடிகளார்.

சந்திரிகா குமாரதுங்கவின் அரசாங்கத்தில் நாட்டின் பிரச்சினைகள் மேலும் மேலும் சிக்கலடைந்து கொண்டு வருகின்றன. எந்தவொரு பிரச்சினைக்கும் தீர்வுகள் கிட்டப்போவதில்லை. பொருளாதாரம் படுமோசமாகப் பாதிக்கப்பட்டிருப்பதால், மக்கள் சொல்லொணாக் கஷ்டங்களை எதிர்கொண்ட வண்ணமுள்ளனர்.

ஐ.தே.க. பாராளுமன்றக் குழுக்
கூட்டத்தில்,
ரணில் விக்கிரமசிங்க

சிறிய கட்சிகளின் தயவில் எந்த அரசாங்கமுமே தங்கியிருக்கக் கூடாது என்று கூறும் ஜனாதிபதியும், புலிகளோடு பேச்சுவார்த்தையே கூடாது என்று இனப்பிரச்சினையையே கேவலப்படுத்தும் ஜே.வி.பியும் இணைந்து அரசாங்கம் அமைத்தால், அது முழுக்க முழுக்க ஒரு இனவாதக் கூட்டரசாகவே இருக்கும்.

மலையக மக்கள் முன்னணித் தலைவர்
பா.உ.,
சந்திரசேகரன்,
(தினக்குரல். 04-09-2001)

# அழையாத விருந்தாளி




ஆளும் பொதுசன ஐக்கிய முன்னணிக்கும் எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையில் பேச்சுவார்த்தை நடந்ததும், பின்னர் அது தோல்வியில் முடிவடைந்ததும் தெரிந்ததே. சிறீலங்காவின் இரு பிரதான சிங்களக் கட்சிகளையும் ஒரு இணக்கத்திற்குக் கொண்டுவந்து, அரசியல் நெருக்கடியைத் தீர்த்துவைத்து சந்திரிகா ஆட்சியை ஸ்திரப்படுத்துவதில் பல வெளிநாட்டு இராஜதந்திரிகள் முன்னின்றனர் என்பது சிறீலங்கா தரப்பில் தெரிவிக்கப்படும் செய்திகள். சிறிலங்கா ஆட்சியாளர்களுக்கும் எதிர்க்கட்சியினருக்கும் இடையே பேச்சுவார்த்தையை ஆரம்பித்துவைக்க, சிறீலங்காவிற்கான அமெரிக்கத் தூதுவர் ஆஸ்லி வில்ஸும் தன் பங்கிற்கு உதவி ஒத்தாசை புரிந்தார் எனச் சொல்லப்பட்டது. இதனை உறுதி செய்வதுபோல் சிறீலங்காவிற்கான அமெரிக்கத் தூதரகமும் அறிக்கை ஒன்றை வெளியிட்டது. சிறீலங்காவிற்கான அமெரிக்கத் தூதுவர் ஆஸ்லி வில்ஸ், ஒரு தரப்பால் அணுகப்பட்டதாகவும், அக்கட்சியின் செய்தியை மற்றைய கட்சிக்கு பரிமாற்றம் செய்யுமாறு கேட்கப்பட்டார் எனவும் தெரிவித்த அமெரிக்க தூதரக அறிக்கை, வாசிங்டனுடன் கலந்தாலோசனை நடத்திவிட்டு, ஆஸ்லி வில்ஸ் இப்பணியைச் செய்ய ஒத்துக்கொண்டார் எனவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்தச் செய்தி சிங்களப் பேரினவாதிகள் மத்தியில் கோபத்தை உண்டாக்கிவிடுமோ என்னவோ என்ற பயத்தில், இச்செய்தி குறித்து, சிறீலங்காவின் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கா தன்பக்க மறுப்பைத் தெரிவித்திருந்தார்.

அமெரிக்கத் தூதுவர் ஆஸ்லி வில்ஸ் தனக்கு எக்கட்சியிடம் இருந்தும் எந்தத் தகவலையும் கொண்டுவந்து தரவில்லை என, ரணில் விக்கிரமசிங்கா மறுத்திருந்தார்.

இந்த மறுப்பு, அமெரிக்கத் தூதுவர் ஆஸ்லி வில்ஸை மிகவும் சங்கடத்திற்குள்ளாக்கியிருக்கும் என்பதில் சந்தேகமில்லை. இதுவிடயத்தில் அவர் மூக்குடைபட்டுள்ளார் என, சர்வதேச செய்தி ஊடகங்களே தலைப்பிட்டு செய்திகளை வெளியிட்டிருந்தன. அமெரிக்கத் தூதுவரின் சங்கடம் ஒருபுறம் இருக்க, சந்திரிகா அரசும் இதுவிடயத்தில் சங்கடப்பட்டதுபோன்றே நடந்துகொண்டது.

ரணில் விக்கிரமசிங்காவின் மறுப்புச் செய்தியைத் தொடர்ந்து, சிறீலங்காவின் வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் மறுநாள், அரச சார்பில் மறுப்பறிக்கை வெளியிட்டார்.

எதிர்க்கட்சியுடன் அரசு பேசுவதாக எடுத்துக் கொண்ட முடிவு அரசு சுயமாக மேற்கொண்ட முடிவேயன்றி யாரும் இதன் பின்னணியில் இல்லை என, கதிர்காமர் தனது அறிக்கையில் தெரிவித்திருந்தார். இரு பிரதான சிங்களக் கட்சிகளும், அமெரிக்க வல்லரசின் தூண்டுதலின் பேரிலேயே பேச்சுவார்த்தையில் ஈடுபட்டன எனவும், உள்நாட்டு அரசியல் சிக்கலைத் தீர்த்துக் கொள்ள, அந்நிய சக்தியின் தலையீட்டை இவ்விரு கட்சிகளும் நாடியுள்ளன எனவும், ஜே.வி.பி. குற்றம் சாட்டியது.

நாட்டில் தோன்றியுள்ள தற்போதைய அரசியல் நெருக்கடியைத் தீர்த்துக்கொள்ள வெளிநாட்டின் மத்தியஸ்தம் தேவையில்லை என, ஐலண்ட் பத்திரிகை கருத்துத் தெரிவித்தது. தோல்வியில் முடிவடைந்த ஆளும், எதிர்க்கட்சிகளுக்கிடையிலான மூன்று கட்டப் பேச்சுவார்த்தையில், அதிகம் பாதிக்கப்பட்டிருப்பது அமெரிக்க தூதுவர் ஆஸ்லி வில்ஸ்தான் என்பது பொதுவான கருத்து.

சிறீலங்காவின் இரு பிரதான கட்சிகளும், அமெரிக்கத் தூதுவரின் தலையீட்டை முற்றாக மறுத்திருக்கும் நிலையில், அழைக்கப்படாமலேயே, இதுவிடயத்தில் வலிந்து நுழைந்து தலையிட்டுள்ளார் அமெரிக்கத் தூதுவர் என்ற பார்வையே ஏற்பட்டிருக்கின்றது என, இராஜதந்திர வட்டாரங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

# ஒரு கை கட்ட... மறு கை இடிக்கும்



கட்டுநாயக்க விமானப்படைத் தளத் தாக்குதல், சிங்களத்தைப் போட்டு உலுக்கிக் கொண்டிருக்கின்றது என்பது பழைய செய்தி. நின்று கொல்லும் வியாதியைப்போல, இந்த அடியின் தாக்கம், சிங்களத்தை நீண்ட காலத்திற்கு உய்யமுடியாத வகையில், பெரும் பாதிப்பை ஏற்படுத்தியிருக்கின்றது என்பது மறைத்துவைக்கப்பட முடியாத பெரும் உண்மை.

சிறீலங்காவிற்கான அந்நியச் செலாவணியை ஈட்டிக்கொடுக்கும் பிரதான துறையான, உல்லாசப் பயணத்துறை மிகப் பெரும் வீழ்ச்சியை சந்தித்திருக்கின்றது. விமானப் போக்குவரத்து மற்றும் கப்பல் போக்குவரத்து பாரிய நெருக்கடியைச் சந்தித்திருக்கும் நிலையில், சிறீலங்காவின் ஏற்றுமதி இறக்குமதித்துறையும் வெகுவாகப் பாதிப்படைந்திருக்கின்றது.

போர் அபாய நாடாக சிறீலங்கா வகைப்படுத்தப்பட்டிருக்கும் நிலையில், சிறீலங்காவிற்குச் செல்லும் கப்பல்கள் விமானங்களுக்கான காப்புறுதித் தொகை, பல மடங்குகளால் அதிகரிக்கப்பட்டிருக்கும் நிலையில், சிறீலங்காவிற்கான விமானக்கட்டணங்கள் அதிகரித்துள்ளன. பல கப்பல் கம்பனிகள், விமானக்கம்பனிகள் சிறீலங்காவிற்கான தமது சேவைகளை நிறுத்தியுள்ளன. பல கப்பல் கம்பனிகள், தமது கப்பல் பயணப் பாதையில் சிறீலங்காவைத் தவிர்த்துவிட்டன.

இந்நிலையில், சர்வதேச நம்பிக்கையை மீண்டும் கட்டியெழுப்பி, அந்நிய நாட்டுச் செலாவணி வரும்படியை மீண்டும் படிப்படியாகக் கட்டியெழுப்ப சிங்களத்தின் உல்லாசப் பயணத்துறையும், ஏற்றுமதி இறக்குமதித் துறையும் பெரிதாகப் பாடுபட்டு வருகின்றன. சிறீலங்காவின் அமைச்சர் ஜெரனி டி மெல், பிரித்தானியா சென்று, சர்வதேச கப்பல் காப்புறுதி அமைப்புக்களிடம், சிறீலங்காவின் பரிதாபகரமான நிலைகுறித்து எடுத்துச் சொல்லி, காப்புறுதிக்கட்டணங்களை குறைக்குமாறு வேண்டுகோள் விடுத்திருக்கின்றார். சர்வதேச போர் அபாய மதிப்பீட்டுக் குழு, சிறீலங்காவை போர் அபாய நாடாக வகைப்படுத்தியதை மீள் பரிசீலனை செய்து, அப்பட்டியலில் இருந்து சிறீலங்காவிற்கு விலக்களிக்குமாறு ஜெரனி டி மெல், மேற்படி சர்வதேச போர் அபாய மதிப்பீட்டுக்குழு அதிகாரிகளிடம் வேண்டுதல் விடுத்துள்ளார்.

உல்லாசப் பயணத்துறை, கவர்ச்சிகரமான விளம்பரங்களை உருவாக்கிவருகின்றது. உன் நண்பன் ஒருவனை நாட்டுக்குக் கூட்டிவா என்ற பிரச்சாரக் கோசம் ஒன்றையும் உல்லாசப் பயணத்துறை முன்வைத்துள்ளது. வெளிநாடுகளில் வாழும் சிங்களவர்களுக்கு இந்த அழைப்பு விடுக்கப்பட்டிருக்கின்றது.

இப்படியாக, தற்போதைய நெருக்கடியில் இருந்து மீளும் வகைகுறித்து, சிறீலங்கா உல்லாசப் பயணத்துறை, சாத்தியமான வழிகளில் பெரிதும் முயன்று வருகின்றது.

விமானப்படைத்தளத்தை பிரதான இலக்காக வைத்து நடத்தப்பட்ட தாக்குதலை, விடுதலைப் புலிகளுக்கெதிரான சர்வதேச பிரச்சார நோக்கம் கருதி, சிறீலங்கா அரசு சர்வதேச விமான நிலையமே தாக்குதலுக்கு உள்ளானதாக பிரச்சாரப்படுத்தியது. விமானப்படைத்தளத்தைப் புகைப்படம் எடுக்கவோ அது பற்றிய செய்திகளை வெளியிடவோ பத்திரிகையாளர்களை அனுமதிக்காத சிறீலங்கா அரசு, விமான நிலையத்தில் எரிந்துகிடக்கும் விமானங்களை புகைப்படம் எடுத்து பிரசுரிக்க, பத்திரிகையாளர்களைத் தூண்டியது.

இந்நடவடிக்கை, எதிர்மாறான விளைவை ஏற்படுத்தியது. விடுதலைப் புலிகளுக்கெதிரான சர்வதேச பிரச்சாரத்திற்காக, சிறீலங்கா அரசால் முன்வைக்கப்பட்ட விமான நிலையத் தாக்குதல் பற்றிய செய்தி, சிறீலங்காவின், உல்லாசப் பயணத்துறையை மட்டுமன்றி, அதன் ஏற்றுமதி இறக்குமதியையும் பாதித்ததோடு நின்றுவிடாமல், சிறீலங்கா தனித்து விடப்பட்ட நாடு என்ற நிலைக்குத் தள்ளியது.

சிறீலங்கா என்றுமே இல்லாத பொருளாதாரச் சீரழிவில் சிக்கித் தவிக்கின்றது.

சாண் ஏற முழம் சறுக்கும் விதத்தில், பொருத்தமற்ற நடவடிக்கைகளை சிங்களம் தனக்குள் தானே மேற்கொள்வது வழக்கம்.

தற்போது மீண்டும் ஒரு நெருக்கடியை சிங்களத்தின் உல்லாசப் பயணத்துறையும், ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகத்துறையும் சந்தித்திருக்கின்றன.

விடுதலைப் புலிகள், கொழும்பில் பெரும் தாக்குதலுக்கு திட்டமிட்டிருக்கின்றனர் என, சிறீலங்காவின் விசேட செய்தி ஊடகத்துறை அண்மையில் விடுத்த அறிவித்தல், சர்வதேச அபிப்பிராயத்தை மெல்ல மெல்லக் கட்டியெழுப்ப மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளை இடித்துத் தகர்த்துவிட்டது.

கொழும்புத் துறைமுகமும், விமான நிலையமும் தற்போது பூரண பாதுகாப்பாய் இருப்பதாகவும், பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளதாகவும், ஒரு பக்கம் நடந்துவரும் சர்வதேச பிரச்சாரத்தை, சிறீலங்காவின் விசேட ஊடகத்துறையின் ஒரே அறிக்கை மிகவும் பலவீனப்படுத்தியுள்ளது.

சிறீலங்கா அரசு, தனது பாதுகாப்புப் படையினரின் திறமை குறித்து பிரச்சாரம் செய்வதிலும் பார்க்க, விடுதலைப் புலிகளின் தெளிவான போராட்டக் கொள்கைகளை எடுத்துச் சொல்லி தனக்குச் சார்பாக பிரச்சாரம் செய்யவும் துணிந்திருக்கின்றது.

கட்டுநாயக்க விமான நிலையத்தில், எந்த ஒரு உல்லாசப் பயணிக்கும் சேதம் ஏற்படவில்லை எனவும், விடுதலைப் புலிகள் ஒருபோதும் பிறநாட்டவரைத் தாக்குவதில்லை எனவும் சிறீலங்கா தரப்பு தற்போது பிரச்சாரம் செய்ய முனைந்திருக்கின்றது. தனது படையினரை சிறீலங்கா நம்புகின்றதோ இல்லையோ ஆனால், விடுதலைப் புலிகளின் பிறழ்வில்லாத நெறிமுறையை சிறீலங்கா அரசு நம்புகின்றது.

# எங்கும் இருப்பர் எதிலும் இருப்பர்



'எங்கும் செல்வோம் எதிலும் வெல்வோம்' என்பது விடுதலைப் புலிகளின் படையணிகளின் உறுதிமிகு கோஷம்.

[illegible] முடியாத இடங்களிலும் புகுந்து தாக்குதல் நடத்தும் வல்லமை படைத்தவர்கள் புலிகள் என்பது, விடுதலைப் புலிகளின் திறமையை உணர்த்துவதற்கு பாவிக்கப்படும் வார்த்தை. எங்கே விடுதலைப் புலிகள் எதனை நினைக்கின்றார்களோ அதனைச் செய்து முடிக்கக்கூடிய வல்லமையும், உறுதியும் படைத்தவர்கள் என்பது சர்வதேச மதிப்பீடு.

இந்தச் சர்வதேச மதிப்பீடு, இன்னும் மேல் நோக்கி ஏறுமுகமாக உயர்ந்து சென்று கொண்டே இருக்கின்றது. மிக நெருக்கடியான பிரதேசங்களில், நெருக்கடியான நேரத்தில், முடியாது என நினைக்கத்தோன்றும் பிரதேசத்தில் முடித்துக்காட்டுவது விடுதலைப் புலிகளுக்கு ஒரு விந்தையாகவே இருந்துவருகின்றது.

சரி, விடுதலைப் புலிகள் இப்படியான தாக்குதல்களை வெகு நுணுக்கமாகத் திட்டமிட்டு, வெற்றிகரமாக எப்படி நிறைவேற்றுகின்றனர் என்பது, பெரும் புதிர். விடுதலைப் புலிகளின் இந்த இராணுவ சாதனைகள் குறித்து, பலவிதமான ஆய்வுகளை, பலவிதமான துணிபுகளை பல இராணுவ மேதைகள், விற்பன்னர்கள் மேற்கொண்டிருக்கின்றனர்.

சிங்களப் பேரினவாதியும், தமிழ் விடுதலைப் போராட்டத்தின் மீது [illegible] விதத்தில், [illegible] தனது அறிவையும் ஆற்றலையும் பயன்படுத்தும் [illegible] என்ற [illegible], சிறீலங்காவின் புலனாய்வுப் பிரிவின் இயலாமையைச் சாடுகிறார். விடுதலைப் புலிகளின் புலனாய்வுப் பிரிவின் திறமை குறித்து வேறுவழியின்றி ஒத்துக்கொள்ளவும் செய்கின்றார்.

பயங்கரவாதம் மற்றும் அரசியல் வன்முறைகள் குறித்த கற்கையில் நிபுணத்துவம் பெற்ற குணரட்ண, விடுதலைப் புலிகளின் உளவுப் பிரிவினர், எங்கெல்லாம் புகுந்து விளையாடுகின்றனர் என, அங்கலாய்க்கின்றார்.

சிறீலங்காவின் முப்படைகளிலும், பொலிஸ் மற்றும் புலனாய்வுப் பிரிவுகளிலும் விடுதலைப் புலிகளின் ஆட்கள் இருக்கின்றார்கள் என்கிறார் அவர்.

ரஷ்யாவை ஆட்சிசெய்த மகாபீற்றர் என்னும் அரசரால் 1703 ஆம் ஆண்டு, பால்டிக் கடலின் கரையோரத்தில் அமைக்கப்பட்ட பெரும் நகரமே சென்பீற்றர்ஸ்பேர்க் ஆகும். பயனற்றுக் கிடந்த பெரும் சதுப்பு நிலப்பரப்பில் இந்நகரம் அமைக்கப்பட்டது. இந்த நகரை அமைக்கும் முயற்சியில் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் நோயினாலும், விபத்துக்களாலும் இறந்தனர். 1712 லிருந்து 1918 வரை இந்நகரமே ரஷ்யாவின் தலைநகரமாக இருந்தது. 1917 ஒக்ரோபர் புரட்சியின் பின் இந்நகரை லெனின்கிராட் என அழைத்தனர். தற்போது இந்நகரம் மீண்டும் சென் பீற்றர்ஸ்பேர்க் என அழைக்கப்படுகின்றது.

இரண்டாம் உலகப் போரின்போது ஜேர்மனியரால் லெனின்கிராட் 872 நாட்கள் முற்றுகையிடப்பட்டிருந்தது. (செப் 8, 1941/ ஜன 27, 1944) 900 நாட்கள் என அழைக்கப்படும் இம்முற்றுகையின் தொடக்கத்தில் இந்நகரில் ஏறத்தாழ முப்பது லட்சம் மக்கள் வாழ்ந்தனர். முற்றுகையினால் பதினைந்து லட்சம் ரஷ்யர்கள் இறந்தார்கள். இவர்களில் எட்டு லட்சம் மக்கள் பிஸ்கர்வஸ்கி என்னும் இடத்தில் புதைக்கப்பட்டார்கள் எனக் கூறப்படுகின்றது. இதை லெனின்கிராட்டில் வாழ்ந்த கவிஞரான சேர்கி பேகி போவு, 'நகரின் அரைவாசி இங்கேதான் உறங்குகின்றது' எனக் குறிப்பிட்டுள்ளார். ('Here lies half the city') முற்றுகையின்போது ஏழு இலட்சம் வீடுகள் அழிக்கப்பட்டன. நகருக்கு ஏற்பட்ட இழப்பு நாலாயிரத்து ஐநூறு கோடி ரூபிள்களாகும்.

எழுத்தில் வடிக்க முடியாதளவு அழிவுகளைச் சந்தித்தபோதும், தன்மான உணர்வோடு தலை தாழ்த்த மறுத்து பெரும் தற்கொடை செய்து லெனின்கிராட் மக்கள் போராடினர். வரலாற்றில் அழியாத இடத்தைப் பெற்றுக்கொண்டார்கள்.

1941ஆம் ஆண்டு யூன் திங்கள் 21ஆம் நாள் ஜேர்மனி ரஷ்யாமீது போர்தொடுத்தது. இதை 'நடவடிக்கை பார்பரோசா' என ஜேர்மனி அழைத்தது. முதல்நாள் சமரில் ரஷ்யா ஆயிரத்து இருநூறு (1200) வானூர்திகளை இழந்தது. இதில் தொள்ளாயிரம் தரையிலேயே அழிக்கப்பட்டன. பதினெட்டு நாட்களுள் ஜேர்மனியப் படை முந்நூறு மைல்களைக் கடந்து முன்னேறியது. ரஷ்யாவின் இருபத்தெட்டு டிவிசன்களைச் சேர்ந்த நாலு லட்சத்து இருபதினாயிரம், (4,20,000) படையினர் முற்றாக அழிக்கப்பட்டனர். மேலும் எழுபது டிவிசன்கள் தம் பலத்தில் அரைவாசியை இழந்தன.

ரஷ்யாவின் தலைநகர் மொஸ்கோவை ஜேர்மன் படையணி விரைவாக நெருங்கியது. ஜேர்மனியின் தலைவரான கிட்லர் மொஸ்கோவைக் கையகப்படுத்துவதற்கு முன்பு உக்கிரேன், கோர்கஸ் பகுதிகளையும் லெனின்கிராட்டையும் கையகப்படுத்த திடீரென முடிவெடுத்தார். லெனின்கிராட்டைக் கையகப்படுத்துவதன் [illegible] தொடர்பை ஏற்படுத்த [illegible] யைக் கட்டுப்படுத்த முடியும். இதன் மூலம் ரஷ்ய கடற்படையைச் செயலிழக்கச் செய்ய முடியும். கிட்லரின் இம்முடிவு, அவர் விட்ட பெரும் தவறுகளில் ஒன்றாகக் கருதப்படுகின்றது.

# 900 நாட்கள் ஒரு முற்றுகைச் சமரும் வெற்றிகொள்ளப்பட்ட விதமும்



லெனின்கிராட்டை முற்றாக அழித்துவிடும்படி கிட்லர் கட்டளையிட்டார். அத்துடன், அந்நகர மக்கள் சரணடைய முயன்றால் அதை ஏற்க வேண்டாம் எனவும் தம் படையினருக்குக் கட்டளையிட்டார்.

ஜேர்மனியின் வேகமான முன்னேற்றத்தைத் தடுத்துநிறுத்தப் போதிய படைபலம் இல்லாத நிலையில், லெனின்கிராட்டைக் காக்க பொதுமக்கள் அணிதிரளுமாறு அழைக்கப்பட்டனர். ஐந்து லட்சம் மக்கள் அணிதிரண்டு பங்களித்தனர். இதில் பெண்களும் பதினான்கு வயதே நிரம்பிய சிறுவர்களும் அடங்குவர்.

ஒரு வாரத்தினுள் மட்டும் ஒரு லட்சத்து அறுபதினாயிரம் மக்கள் அணிதிரண்டனர். இதில் முப்பத்திரண்டாயிரம் பேர் பெண்கள்.

யூலை 10ஆம் நாள் பொதுமக்களிலிருந்து அணிதிரட்டப்பட்ட முதலாம் டிவிசன் போர்முனைக்குச் சென்றது. பலரிடம் துப்பாக்கி இருக்கவில்லை. மண்வெட்டி, கோடரி என அகப்பட்ட கருவிகளைத் தாங்கிய வண்ணம் இவ்வணி போர்முனைக்குச் சென்றது.

மெகா (Mega) சிலிசெல்பேர்க் (Shlisselburg) ஆகிய பகுதிகளை ஜேர்மனி கையகப்படுத்தியதும், லெனின்கிராட்டுக்கும் ரஷ்யாவின் ஏனைய பகுதிகளுக்கும் இருந்த தரைவழித் தொடர்பு முற்றாகத் துண்டிக்கப்பட்டது. தொள்ளாயிரம் நாள் முற்றுகை தொடங்கியது.

லெனின்கிராட்டுக்கும் மற்றைய ரஷ்யப் பகுதிகளுக்கும் இடையே வான்வழியும் லேடோகா (Ledoga) ஏரிவழியும் மட்டுமே தொடர்பிருந்தது.

செப்ரெம்பர் திங்களில் லெனின் கிராட்டில் இருந்த முப்பது லட்சம் ரஷ்யர்களுக்கு (இதில் ஐந்து லட்சம் படையினரும், அடங்குவர்) முப்பது நாட்களுக்கு மட்டுமே போதுமான உணவிருந்தது.

நொவெம்பர் 20 ஆம் நாளிலிருந்து, தொழிலாளி ஒருவருக்கு நாளொன்றிற்கு 250 கிராம் உணவும் மற்றையோருக்கு 125 கிராம் உணவும் மட்டுமே வழங்கப்பட்டது. முன்னணிப் படையினருக்கு 500 கிராமும் பின்னணியில் செயற்பட்ட படையினருக்கு 300 கிராமும் வழங்கப்பட்டது.

அகப்பட்டதை எல்லாம் மக்கள் சாப்பிட்டார்கள். நாயிலிருந்து, சுவரில் ஒட்டப்பட்ட பேப்பரிலிருந்த மா வரை சாப்பிட்டார்கள். ஒருமுறை ஒரு படைவீரனிடம் இருந்த தோற்பெட்டியைக் கேட்டு வாங்கிய ஒரு பெண், அடுத்தநாள் அவனுக்கு அத்தோலில் ஜெலி செய்து அனுப்பியிருந்தார்.

நாளொன்றுக்கு மூவாயிரம் மக்கள் உணவின்றி மடிந்தார்கள். இதைத் தவிர எறிகணை வீச்சில், வான் தாக்குதலில் கொல்லப்பட்டோர் பலர். வீதிக்கு வீதி பிணங்கள் கிடந்தன. அந் [illegible] களை மூடி பனி பெய்தது. பனிக் [illegible] மூடிய பனி உருகத் தொடங்கியபோதே, வீதியில் பிணங்கள் பல அகற்றப்படவில்லை, அவற்றை மூடிய பனியின் மேலால் நாம் நடந்துசென்று வந்திருக்கின்றோம் என மக்கள் உணர்ந்தார்கள்.



தனியா என்ற பதினொரு அகவை நிரம்பிய சிறுமியின் நாட்குறிப்பில், 'ஜெனியா 28, டிசெம்பர் 41 இல் இறந்தார். பருமகா, 23 ஜன. 42 இல் இறந்தார். லேகா, 17 டிசெம்பர் இறந்தார். அம்மா, 13 மேயில் இறந்தார். எல்லோரும் இறந்துவிட்டனர். நான் மட்டும் இருக்கின்றேன்' என எழுதப்பட்டிருந்தது. அச் சிறுமியும் 43ஆம் ஆண்டு நோய்வாய்ப்பட்டு இறந்துபோனாள்.

வானொலியில் தொடர்ந்து நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. நிகழ்ச்சி தர வந்த கவிஞர்கள், பாடகர்கள் பலர் நிற்கமுடியாதவர்களாக இருந்தார்கள். தவழ்ந்தபடியும் [illegible] நிகழ்ச்சிகளைத் தந்த அவர்களில் பலர், அடுத்த சிலநாட்களில் இறந்துபோனார்கள். எரிபொருள் இன்மையால் வானொலிச் சேவை தடைப்பட்டபோது மக்கள் குழப்பமடைந்தார்கள். 'எமக்குத் தரப்படும் சிறு உணவுப் பங்கீட்டை வேண்டுமானால் தருகின்றோம், வானொலியை நிறுத்தாதீர்கள். அதுவே எம் இருப்புக்குத் துணை' என வானொலி நிலையத்திற்குச் சென்று கூறினர்.

மிகப்பெரிய இன்னல்களுக்குள்ளும் லெனின்கிராட் மக்கள் போராடத் தயங்கவில்லை. உணவு முற்றுகையை உடைக்க முயன்றனர். லேடோகா ஏரி நூற்றிருபத்தைந்து மைல் நீளமும் எண்பது மைல் அகலமும் கொண்டது. இதுவே ஐரோப்பாவிலிருக்கும் மிகப் பெரிய நன்னீர் ஏரியாகும். நொவெம்பரில் இவ்வேரி குளிர் காரணமாக உறையத் தொடங்கும். ஐந்து அங்குலத் தடிப்பளவுக்கு இந்நீரேரி உறைந்ததும் அதன் வழியாக, குதிரைகளால் இழுக்கப்படும் சறுக்கூர்திகள் மூலம் உணவு கொண்டுவரும் முயற்சி தொடங்கியது. பனிக்கட்டியின் தடிப்புக் கூடியதும் லொறிகள் மூலம் உணவு எடுத்துவரப்பட்டது. ஜேர்மனியரின் வான் தாக்குதலால் பல லொறிகள் அழிந்தன. பல வழியில் புதையுண்டன. உணவு எடுத்துவரும் முயற்சி நடைபெற்றுக்கொண்டிருந்தபோது, லெனின் கிராட்டில் இருந்து போராட்டத்தில் பங்களிக்க முடியாத மக்கள் அகற்றப்பட்டார்கள். ஐந்து லட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் அகற்றப்பட்டார்கள். உணவு நிலை சற்று முன்னேற்றமடைந்ததும், 42ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் இருந்து, மூன்று லட்சம் மக்கள் லெனின் கிராட்டை துப்புரவு செய்யும் பணியில் இறங்கினார்கள். நீண்ட நாட்களின் பின் ஏப்ரல் திங்களில், நூறுக்கு மேற்பட்ட கார்கள் வீதியில் ஓடத்தொடங்கின. அவற்றைக் கண்டதும் மக்கள் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. கார்க் 'கோணின்' ஒலியைக் கேட்ட ஜேர்மனியப் படையினர் நம்பிக்கை இழந்தனர்.

ஜேர்மனியர் லெனின்கிராட்டைக் கைப்பற்றும் நிலையிழந்தால் அந்நகரை முற்றாக அழிக்கும் வகையில், எல்லா இடங்களிலும் வெடிபொருட்கள் வைக்கப்பட்டன. மிகுந்த இழப்புக்களுடன் ஜேர்மனியரின் முன்னேற்றத்தைத் தடுத்து நிறுத்திய ரஷ்யர்கள், எதிர்த் தாக்குதலைத் தொடங்கினர். முற்றுகையின் ஐநூற்று ஆறாம் நாள் சிலிசெல்பேர்க்கை ரஷ்யர்கள் மீண்டும் வெற்றிகொண்டதையடுத்து, முற்றுகை ஓரளவு தளர்த்தப்பட்டது.

1944ஆம் ஆண்டு ஜனவரித் திங்கள், ரஷ்யா மிகப்பெரிய அளவில் எதிர்த் தாக்குதலைத் தொடங்கியது. ஜேர்மனியர்களை மிகவும் அச்சுறுத்திய ரஷ்யாவின் 'கத்துஷா [illegible]' [illegible] ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட எறிகணைகளை ஜேர்மன் நிலைகள் மீது வீசின. பெரும் சமரைத் தொடர்ந்து ஜனவரி 27ஆம் நாள், முற்றுகை முடிவுக்கு வந்தது.

1945ஆம் ஆண்டு, லெனின்கிராட் மக்களுக்கு, அவர்களின் வீரத்திற்கு லெனின் விருதையும், 1965ஆம் ஆண்டு 'வீரர்கள் நகர்' என்ற விருதையும் ரஷ்ய அரசு வழங்கியது.

முற்றுகையின்போது இறந்த மக்கள் நினைவாக எழுப்பப்பட்ட நினைவுக் கல்லறையொன்றில் ரஷ்யக் கவிஞர் ஒருவர் எழுதிய வரிகள், அம்மக்களின் வீரத்தை உணர்வோடு எடுத்துக் காட்டுகின்றன.

'லெனின் கிராடே,
புரட்சியின் தொட்டிலே!
உன்னைக் காக்க
உயிர்நீத்த உழைப்பாளர்
உறங்கும் இடமிது
நடுகல்லால் பூசிக்கப்பட்டு
என்றுமழியாது கல்லறைகளின் கீழ்
உறங்கும் இவர்கள் தற்கொடையை
அளவிட முடியாது!
இவர்களை
இவர்கள் செயல்தனை என்றுமே
மறக்க முடியாது!'

ஜேர்மனியப் படைகளால் லெனின்கிராட் நகரம் 872 நாட்கள் முற்றுகையிடப்பட்டிருந்தது. அங்கே 30 லட்சம் மக்கள் வசித்தனர். முற்றுகையை உடைக்க அணிதிரளுமாறு விடுத்த வேண்டுகோளுக்கு இணங்க, அந்நகரின் 5 லட்சம் மக்கள் படையில் சேர்ந்தனர்.

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

# பலமான தலைமைத்துவம் பேரினவாதக் கட்சிகளிடம் இல்லை

மட்டு. அம்பாறை அரசியல்துறை பொறுப்பாளர் திரு. கரிகாலன்

'சிறிலங்காவில் எந்தவொரு பேரினவாதக் கட்சியிடமும் தற்போது பலமான அரசியல் தலைமைகள் இல்லை. எந்த அரசாங்கம்தான் ஆட்சியிடமேறினாலும் பலவீன மடைந்துள்ள இத்தலைமைகளால் பேசுவார்த்தை மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியாது' இவ்வாறு மட்டு அம்பாறை அரசியல்துறை பொறுப்பாளர் கரிகாலன் மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலை புலிகளின் கட்டுப் பாட்டிலுள்ள அரசடித்தீவில் உள்ளூர் பத்திரிகையாளர் களுக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்தார். அதன் விபரம் வருமாறு....



சில ஊடகங்களும் சில பொதுமக்களும் நாங்கள் பலாத்காரமாக ஆட்சேர்ப்புச் செய்வதாகக் கூறிப் பொய்ப்பிரச்சாரம் செய்துவருகின்றனர். இதில் எந்தவொரு உண்மையுமில்லை. இதுவெறும் விசமத்தனமான பிரச்சாரமாகும். நாங்கள் பலாத்காரமாக இளைஞர்களைப் பிடிப்பதாக இருந்தால் ஒரேநாளில் ஆயிரக்கணக்கானவர்களைப் பிடிக்கலாம். அது போராட்டத்திற்கு எந்த விதத்திலும் உதவப்போவதில்லை. பலாத்காரமாகப் பிடித்து பயிற்சி கொடுத்து சிறைக்கூடத்தில் அடைத்துவைத்து போராட்டத்தை நடத்த முடியாது. அவர்கள் தமது விருப்புடன் வந்து சேர்ந்தால் மாத்திரமே அவர்களால் விருப்புடனும், உணர்ச்சியுடனும் போராடமுடியும்.

**★★ 'படையினரின் துப்பாக்கிச் சூட்டிலும், எறிகணைத் தாக்குதல் மற்றும் பாலியல் பலாத்காரத்திலும் சிக்கி உயிரிழப்பதைவிட விடுதலைப் புலிகள் இயக்கத்தில் போராளிகளாக இணைய வேண்டுமென்ற உணர்வு இப்பொழுது பெற்றோர்கள் மத்தியிலும், பிள்ளைகள் மத்தியிலும் மேலோங்கியிருக்கிறது'**

'தற்போது எமது போராட்டத்தில் பல இளைஞர்களும் இளம் பெண்களும் இணைந்து வருகின்றனர். ஆனால் சில ஊடகங்களும் சில பொதுமக்களும் நாங்கள் பலாத்காரமாக ஆட்சேர்ப்புச் செய்வதாகக் கூறிப் பொய்ப்பிரச்சாரம் செய்து வருகின்றனர். இதில் எந்தவொரு உண்மையுமில்லை. இதுவெறும் விசமத்தனமான பிரச்சாரமாகும். நாங்கள் பலாத்காரமாக இளைஞர்களைப் பிடிப்பதாக இருந்தால் ஒரேநாளில் ஆயிரக்கணக்கானவர்களைப் பிடிக்கலாம். அது போராட்டத்திற்கு எந்த விதத்திலும் உதவப்போவதில்லை. பலாத்காரமாகப் பிடித்து பயிற்சி கொடுத்து சிறைக்கூடத்தில் அடைத்துவைத்து போராட்டத்தை நடத்தமுடியாது. அவர்கள் தமது விருப்புடன் வந்து சேர்ந்தால் மாத்திரமே அவர்களால் விருப்புடனும், உணர்ச்சியுடனும் போராடமுடியும். பலாத்காரமாகப் பிடித்து பெரும் செலவில் பயிற்சிகளை வழங்குவது முட்டாள்தனமாகும். அத்துடன் எமது போராளிகளுக்கு சகல சுதந்திரத்தையும் நாம் வழங்கியுள்ளோம். எனவே அவர்கள் சுதந்திரமாக செயற்பட முடியும். 'தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றிலே அரசடித்தீவு, கொக்கட்டிச்சோலை, பழுகாமம், முனைக்காடு போன்ற கிராமங்களில் புறநானூற்றுத்தாய்மார்கள் புதிய சரித்திரம் படைத்துக்கொண்டிருக்கின்றார்கள். விடுதலைப் போராட்டத்திலிருந்து ஒதுங்கியிருந்து படையினரின் துப்பாக்கிச் சூட்டிலும், எறிகணைத் தாக்குதல் மற்றும் பாலியல் பலாத்காரத்திலும் சிக்கி உயிரிழப்பதைவிட விடுதலைப் புலிகள் இயக்கத்தில் போராளிகளாக இணையவேண்டுமென்ற உணர்வு இப்பொழுது பெற்றோர்கள் மத்தியிலும் பிள்ளைகள் மத்தியிலும் மேலோங்கியிருக்கிறது'

**★★ 'தமிழ் மக்களின் தேசியப் பிரச்சினைக்கு பேச்சுவார்த்தைகளின் மூலம் தீர்வை முன்வைக்கக்கூடிய அரசியல் பலம்கொண்ட சிங்களத் தலைவர்கள் இலங்கையில் இல்லை.**

'தமிழ் மக்களின் தேசியப்பிரச்சினைக்கு பேச்சுவார்த்தைகளின் மூலம் தீர்வை முன்வைக்கக்கூடிய அரசியல் பலம்கொண்ட சிங்களத் தலைவர்கள் இலங்கையில் இல்லை. தற்போதைய தலைவர்களிடம் ஆயுதப் படையைக் கட்டுப்படுத்தும் பலம் இல்லை. ஜே. ஆரிடமும், பிரேமதாசவிடமும் படையினரைக் கட்டுப்படுத்தும் பலம் இருந்தது. ஆனால், சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகாவிடம் அந்தப் பலம் இல்லை. இப்போது அவர் கட்டளையிட்டால் அதை நிறைவேற்றும் நிலையில் படைத் தலைமை இல்லை. உதாரணமாக வன்னிக்கான பொருளாதாரத்தடையை நீக்குவதாக சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிகா வர்த்தமானி பிரகடனத்தை வெளியிட்டார். ஆனால், வவுனியாவில் உள்ள படை அதிகாரிகள் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. அவர்கள் பொருட்களை அனுப்ப மறுத்துவிட்டார்கள். இதன்மூலம் படைத்துறையின் கட்டளைப்படியே ஜனாதிபதி செயற்படுகிறார் என்பது புலனாகின்றது. இப்படியொரு சூழ்நிலை இருக்கும்போது சமாதானப் பேச்சுவார்த்தை மூலம் இனப்பிரச்சினைக்கு தீர்வு கிடைக்கும் என நம்பமுடியாது'

**★★ 'நோர்வே நாட்டின் விசேட தூதுவர் எரிக் சொல்கைம் எடுத்த முயற்சிகள் வெற்றியளிக்கும் என்ற எதிர்பார்ப்பு தமிழ் மக்களிடம் இருந்தது. அந்த எதிர்பார்ப்பும் மறைந்துவிட்டது.**

'நோர்வே நாட்டின் விசேட தூதுவர் எரிக் சொல்கைம் எடுத்த முயற்சிகள் வெற்றியளிக்கும் என்ற எதிர்பார்ப்பு தமிழ் மக்களிடம் இருந்தது. அந்த எதிர்பார்ப்பும் மறைந்துவிட்டது. சமாதானத் தூதுவர் எரிக் சொல்கைமை சிறீலங்கா அரசாங்கம் ஓரம்கட்டி சமாதானப் பேச்சுவார்த்தைகளைக் குழப்பிவிட்டது. அதுமட்டுமல்ல சமாதான முயற்சியில் ஈடுபட்ட நடுநிலையாளரான எரிக் சொல்கைம் மீது புலி முத்திரை குத்தி எமது ஆதரவாளர் என பழியைச் சுமத்தியிருக்கிறது. இவ்வாறு அநாகரீகமான செயலைச் செய்யும் சிறீலங்கா அரசை நம்பி எந்தவொரு வெளிநாடும் இனிமேல் மத்தியஸ்தத்திற்கு துணிந்து முன்வரப் போவதில்லை.

இதனால் தமிழ் மக்கள் சிறீலங்கா அரசில் நம்பிக்கை இழந்துவிட்டார்கள். ஆனையிறவு உட்பட சிறீலங்காப் படைகளின் பெருந்தளங்களை வீழ்த்தி நமது மண்ணை மீட்டுவரும் விடுதலைப் புலிகள் மீது மக்களுக்கு பூரண நம்பிக்கை ஏற்பட்டிருக்கின்றது. போராட்டம் வெல்லும் என்ற மன உறுதி மக்கள் மத்தியில் ஏற்பட்டிருக்கின்றது. இது எமக்கும் ஒரு உத்வேகத்தைத் தந்திருக்கிறது. எமது தலைவரின் மதிநுட்பமான சிறந்த வழிகாட்டலில் தளபதிகள் போராட்டத்தை நடத்திவருகிறார்கள். மன உறுதி, அதி தொழில்நுட்பத்துடன்கூடிய ஆயுதபலம், ஆட்பலம் இவை எல்லாவற்றிற்கும் மேலாக எமது தலைவரின் நெறிப்படுத்தல்கள் அனைத்தும் இணைந்து எமது இயக்கம் இன்று பலம்பொருந்திய விடுதலை இயக்கமாக உள்ளது.

இழந்த யாழ். குடாநாட்டை நாம் மீண்டும் கைப்பற்றுவோம். அதேவேளை கிழக்கு மாகாணத்தில் ஆக்கிரமித்திருக்கும் பகுதிகளிலிருந்து சிறீலங்கா படையினரை மிகவிரைவில் விரட்டியடிப்போம்.

மத்தியமுகாம் தாக்குதலுக்கு எமது பலத்தின் ஒருதுளியைத்தான் பாவித்தோம். விரைவில் முழுப்பிரதேசத்தையும் மீட்டெடுப்போம். அதற்கு மக்கள் பூரண ஒத்துழைப்பை வழங்கி வருகின்றார்கள்'


**★★ மட்டக்களப்பு மாவட்டம் முழுமையாக விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் வரும்போது இங்குள்ள முஸ்லீம்கள் பற்றி விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு என்ன?**

மட்டக்களப்பு மாவட்டம் முழுமையாக விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் வரும்போது இங்குள்ள முஸ்லீம்கள் பற்றி விடுதலைப் புலிகளின் நிலைப்பாடு என்ன?

'கிழக்கு மாகாணத்திலுள்ள முஸ்லீம் மக்கள் தமிழீழத்தில் வாழும் தனி இனக்குழு. அவர்கள் தனியான கலாச்சாரத்தைக் கொண்டவர்கள் என்பதை ஏற்றுக்கொள்கின்றோம். அவர்கள் தனித்துவமாக வாழ்வதற்கான சகல உரித்தும் இருக்கிறது. பேசுகின்ற மொழியால் ஒன்றுபட்டிருக்கின்றோம். இதுவொரு பலமான இணைப்பு. அவர்களையும் சிறீலங்கா அரசினதும் படைகளினதும் அடக்குமுறைகளிலிருந்து மீட்டெடுக்க வேண்டும். அவர்கள் சுதந்திரமாக தனித்துவமாக தமிழீழத்தில் வாழும் நிலையை ஏற்படுத்துவோம். அவர்கள் எமது போராட்டத்திற்கு நேரடியாக பங்களிப்புச் செய்யாவிட்டாலும் பக்கபலமாக இருக்கவேண்டும். அதையே நாம் வரவேற்கின்றோம்'

**விடுதலைப் போராட்டம் தொடர்பாக தமிழ்க் கட்சிகள் அண்மைக்காலத்தில் எடுத்திருக்கும் நிலைப்பாடு வரவேற்கத்தக்கது.**

'விடுதலைப் போராட்டம் தொடர்பாக தமிழ்க் கட்சிகள் அண்மைக்காலத்தில் எடுத்திருக்கும் நிலைப்பாடு வரவேற்கத்தக்கது. தமிழ்க் கட்சிகள் இன்று ஒன்று சேர்ந்திருப்பது நல்ல சகுனமாகும். இந்த ஒற்றுமை மகிழ்ச்சி தருவதாகவுள்ளது. இந்த ஒற்றுமை உணர்வும் அவர்கள் அண்மைக்காலத்தில் விடுதலைப் போராட்டம் தொடர்பாக எடுத்திருக்கும் நிலைப்பாடும் வரவேற்கத்தக்கது. அந்த ஒற்றுமை உணர்வு மேலும் வளரவேண்டும்' என்றும் திரு. கரிகாலன் தெரிவித்தார். ●




# தென் ஆபிரிக்காவில் இன வேறுபாட்டுக்கு எதிரான மகாநாடு

## WORLD CONFERENCE AGAINST RACISM (WCAR) DURBAN-SOUTH AFRICA.

### மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் படம், இவரை யார் கொலை செய்தது என்ற கேள்வியுடன் முன்வைக்கப்பட்டுள்ளது

தென்னாபிரிக்காவில் டேபன் நகரில், இனப்பாகுபாடு, இனவெறிக்கெதிரான அனைத்துலக மாநாடு நடைபெற்றுவருகின்றது. ஐ.நா. சபையின் செயலாளர் நாயகம் திரு. கோபி அனான் அவர்கள் இந்த மாநாட்டை, 31ம் திகதி ஆரம்பித்துவைத்தார். பல நாடுகளின் தலைவர்கள், வெளியுறவுத்துறை அமைச்சர்கள், மனித உரிமை அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள், என, பல்லாயிரக்கணக்கானோர் இம்மாநாட்டில் கலந்துகொண்டனர்.

ஒடுக்கப்பட்ட மக்கள் சமூகத்தின் பிரதிநிதிகள், தங்கள் தங்கள் இனத்தின் அவலங்களை வெளிக்கொணரும் தளமாக இந்த மாநாட்டையும், அந்த மாநாட்டுச் சூழலையும் நன்கு பயன்படுத்தினர்.

சிறீலங்காப் பேரினவாத அரசுகளின் ஒடுக்குமுறைக்குள் சிக்குண்டு தவிக்கும் தமிழீழ மக்களின் அவலங்களை வெளிப்படுத்துவதில், பிரான்சில் தலைமையகத்தைக் கொண்டியங்கும் தமிழர் மனித உரிமை மையமும், தென்னாபிரிக்க தமிழர் ஒங்கிணைப்புக் குழுவும் முன்னின்று செயற்பட்டன.

மாநாட்டுக்கு முன்னராக, ஓகஸ்ட் 28ம் திகதியில் இருந்து செப்டம்பர் 1ம் திகதிவரை, அரசசார்பற்ற நிறுவனங்களின் அரங்கைப் பயன்படுத்தி, கண்காட்சிகள், பட்டறைகள், கூட்டங்கள், சந்திப்புக்கள் என்பனவற்றை, தமிழர் மனித உரிமைமையமும், தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவும் மேற்கொண்டது.

தென்னாபிரிக்க தமிழர் ஒருங்கிணைப்புக்குழு நடத்திய கண்காட்சிகளில், தமிழீழ தேசிய விடுதலை இயக்கமான தமிழீழ விடுதலைப் புலிகளின் களச் சாதனைகளைப் பிரதிபலிக்கும், புகைப்படங்கள் ஆவணங்கள் என்பன காட்சிக்கு வைக்கப்பட்டன. தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் தோற்றமும் வளர்ச்சியும் பற்றிய விளக்கப் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன.

தமிழர் மனித உரிமை மையம், தமிழீழ மக்கள் மீது மேற்கொள்ளப்படும் மனித உரிமை மீறல்களை வெளிக்கொணர்வதில் கடுமையாக உழைத்தது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகளுக்கான உயர் ஆணையர் மேரி றொபின்சன் அவர்களுக்கு தமிழர் மனித உரிமை மையம் மனு ஒன்றைக் கையளித்ததுடன், சிங்களப் பேரினவாத அரசுகளால் தமிழ்மக்கள் மீது திட்டமிட்ட முறையில் கட்டவிழ்த்து விடப்பட்ட இனவெறித் தாக்குதல்கள், இன ஒதுக்கல் நடவடிக்கைகள் என்பனவற்றைப் பட்டியலிட்டு, இருபத்தியொரு பக்க தகவல் கொத்தொன்றை வெளியிட்டது.

இலங்கைத்தீவில் தமது அரசியல் உரிமையைப் பெறுவதற்கான தமிழர்களின் சாத்வீகப் போராட்டங்கள், பாராளுமன்றப் பிரதிநிதித்துவம் போன்ற அணுகுமுறைகள் படுதோல்வி கண்ட காரணத்தினால் தமிழர்கள் தமது சுயநிர்ணய உரிமையை அடைவதற்கு ஆயுதப் போராட்டத்தை ஆரம்பித்தனர் என, தமிழர் மனித உரிமைகள் மையம் திருமதி.மேரி றொபின்சனுக்கான தமது மனுவில் குறிப்பிட்டுள்ளது.

உலகின் பல பாகங்களிலும் பலவிதப்பட்ட இன வேறுபாடுகளின் பிரதிபலிப்புக்கள், உள்நாட்டு யுத்தங்கள், ஆயுதப் போராட்டங்கள், சுதந்திரப் போராட்டங்கள் போன்ற வழலங்களை அடையச் செய்துள்ளது எனத் தனது ம[illegible] தமிழர் மனித உரிமை மையம், சு[illegible] உ[illegible]வதன் மூலமே ஓர் நிரந்தர அரசியல் தீர்வுக்கு வழிவகுக்கும் என்பது உலக அனுபவம் எனச் சுட்டிக்காட்டியுள்ளது.

தமிழர் தரப்பால், நடத்தப்பட்ட கண்காட்சியில், இவரை யார் கொன்றது என்ற கேள்வியுடன் மாமனிதர் குமார் பொன்னம்பலத்தின் பெரியளவிலான படமும் கண்காட்சியில் இடம்பெற்றது.

தமிழர் தரப்பால் முன்வைக்கப்பட்ட கருத்துக்களும், கண்காட்சியும் பெருமளவிலானோரைக் கவர்ந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

தென்னாபிரிக்க வானொலி, தொலைக்காட்சிகள், தமிழர் தரப்பால் மேற்கொள்ளப்பட்ட கண்காட்சிகள் தொடர்பான செய்திகளை வெளியிட்டன.

இந்த மாநாட்டிற்கு சிங்கள அரசும் தனது பிரதிநிதிகளை அனுப்பிவைத்தது. விடுதலைப் புலிகளுக்கு எதிரான பிரச்சாரத்தையும், சிறிலங்கா அரசு மீதான இன ஒதுக்கல், இனச் சுத்திகரிப்பு குற்றச்சாட்டிற்கு பதிலளிக்கும் பணியையும் அவர்கள் செய்தனர் என்றபோதும், சிங்கள அரசின் பிரச்சாரத்திற்கு, அங்கு திரண்டிருந்த பேராளர் மத்தியில் மதிப்பிருக்கவில்லை.

கடந்த மாதம் 31ம் திகதியில் இருந்து, இம்மாதம் 7ம் திகதிவரை நடைபெற்றுவரும் இனவாதத்திற்கு எதிரான ஐக்கிய நாடுகள் சபையின் உலக மாநாட்டில், உலகெங்கிலும் இருந்து சுமார் பதினையாயிரத்திற்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் கலந்துகொள்கின்றனர் எனக் கணக்கிடப்பட்டிருக்கின்றது.

இந்த மாநாட்டை முன்னிட்டு, தென்னாபிரிக்க தமிழர் ஒருங்கிணைப்புக் குழு, மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை ஒழுங்கு செய்து வெற்றிகரமாக நடத்தியிருக்கின்றது.

இந்த மாநாட்டில் கியூபாத் தலைவர் பிடல் காஸ்ரோ உட்பட முக்கியமான தேசியத் தலைவர்கள் பலர் கலந்துகொண்டிருக்கின்றனர்.

பத்தொன்பதாம் நூற்றாண்டுவரை ஆபிரிக்கர்களை அடிமைகளாகக் கொண்டு சென்ற மேற்குலக நாடுகள், இந்த மனித இழிசெயலுக்கு மன்னிப்புக்கோரவேண்டும் என ஆபிரிக்கநாடுகள் பொதுக்கோசத்தை முன்வைத்தன. பாலஸ்தீன மக்கள் மீது இஸ்ரேல் நடத்திவரும் தாக்குதல்கள், ஆக்கிரமிப்புக்கள் குறித்து அரபுநாடுகள் கண்டனம் தெரிவித்தன. அமெரிக்காவோ இந்த மாநாட்டை பகிஷ்கரிப்பதாக அறிவித்தது. இந்த இழுபறிகள், பிணக்குகள், முரண்பாடுகளுக்கு மத்தியில் இந்த மாநாடு சிறப்புற நடைபெற்றுவருகின்றது.

அமெரிக்கா மற்றும் இஸ்ரேலின் பேராளர் குழுக்கள் இந்த மாநாட்டில் இருந்து வெளிநடப்புச் செய்துள்ளன. இருந்தபோதும், இந்த மாநாடு குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் கண்டிருக்கின்றது எனத் தெரிவிக்கின்றார் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகளுக்கான உயர் ஆணையர் திருமதி. மேரி றொபின்சன்.



## பின்னின்று இயக்கும் நம்பிக்கைகள் வாழ்வதற்காய்...

துருப்பிடித்து உருள மறுக்கும் வண்டிச்
சக்கரம் போலானது வாழ்க்கை.
ஆதார வேர்கள் எல்லாமும் அறுந்த பின்பும்
எப்படியோ நகருது வாழ்க்கை.
எதிர்காலம் நோக்கிய
நம்பிக்கைகள் மட்டுமே...
பின்னின்று இயக்க
எப்படியோ நகருது வாழ்க்கை.



தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

சிறுகதை

# காலம்





கோபி அனான்

# சிறீலங்கா அரசானது தமிழ் மக்களுக்கெதிரான யுத்தத்தை மேலும் தீவிரப்படுத்தும் நோக்கோடு, புதிய கொடிய விளைவுகளை ஏற்படுத்த வல்ல இரசாயன ஆயுதங்களை கொள்வனவு செய்துள்ளது குறித்து ஐ.நா. பொதுச்செயலாளர் கோபி அனான் அவர்களுக்கு வன்னிப் பிராந்திய பிரஜைகள் குழு அனுப்பிவைத்துள்ள கடிதம்.

மேதகு கோபி அனான்
செயலாளர் நாயகம்,
ஐ.நா. தலைமைக் காரியாலயம்,
ஜெனீவா.

மேன்மை தங்கிய ஐயா!

## *சிறீலங்காவில் இரசாயன ஆயுதங்கள்*

சிறீலங்கா அரசாங்கம் சர்வதேச கோட்பாடுகளை மதித்து, ஜனநாயக நல்லாட்சி நடாத்தும் ஓர்நாடு என்று உலகிற்குக் காட்டிவருவதால், உலக நாடுகளும் இந்நாட்டுக்கு பல விதத்திலும் உதவி வருகின்றன. ஆனால், இவ்வரசாங்கம் தமிழ் மக்களைப் பொறுத்தவரை இன ஒழிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதை வருத்தத்தோடு, பல வழிகளில் உள்நாட்டிலும், வெளியிலும் ஸ்தாபனங்கள் மூலமும், ஊடகங்கள் மூலமும், ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள் மூலமும் வெளிக்கொணரப்பட்டிருக்கின்றது. தமிழரின் விடுதலை இயக்கத்தின் பிரதிபலிப்பே தமிழீழ விடுதலைப் புலிகள் (L.T.T.E.) இது தமிழரின் நம்பிக்கையை இழந்த அரசாங்கத்தின் தோற்றுவிப்பே ஆகும். இதை உலகம் உரிய முறையில் விளங்கிக் கொள்ளமறுக்கின்றது.

உண்மையிலேயே தற்போது இலங்கை அதிபராக இருக்கும் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க 1994இல் தேர்தல் பிரச்சாரத்தின்போது, முன்னைய அரசாங்கங்களினால் தமிழர்கள் கீழ்த்தரமாக நடாத்தப்பட்டார்கள் என்ற உண்மையை ஒத்துக் கொண்டு ஆட்சிக்கு வந்தார். முன்னைய அரசாங்கங்கள் என்று அவர் குறிப்பிட்டது அவரது தந்தையும், தாயும் அங்கம் வகித்த கட்சியினால் ஏன் அவர்கூட தற்போது அங்கம் வகிக்கின்ற கட்சியினால் ஏற்படுத்தப்பட்ட அரசாங்கமே. அன்று அவர் நீதியும் அர்த்தமும் உள்ள விதத்தில் L.T.T.E. யுடன் நடத்தப்படும் பேச்சுவார்த்தையினால்தான் தமிழர் பிரச்சினை தீர்க்கப்படலாம் என அறிவித்திருந்தார். மறுபக்கத்தில் தற்போதைய எதிர்க்கட்சியான ஐக்கிய தேசிய கட்சி முதலாக அதே கருத்துக்களை தேர்தலின்போது வெளியிட்டது. ஆனால், யதார்த்தமாக பார்க்கும்போது இரு கட்சிகளுமே பதவிக்கு வந்ததும், தாங்கள் கூளுரைத்த மேற் குறிப்பிட்ட தீர்மானங்களை குப்பைக்கூடையில் வீசிவிட்டு, தமிழர் போராட்டத்தை கொச்சைப்படுத்தி விடுதலைப் புலிகளுக்கு பயங்கரவாதிகள் என்று பட்டம் சூட்டிவிடுகிறார்கள். விடுதலைப் புலிகளோ தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகளைப் பெறுவதற்கு சமாதான பேச்சுவார்த்தைகள் அர்த்தமுள்ள விதத்திலும், புரிந்துணர்வோடும் நடாத்தப்படவேண்டும் என்பதை எப்போதும், வலியுறுத்தி வந்திருக்கிறார்கள். இதற்கு ஒரு எடுத்துக்காட்டு, அமெரிக்க, பிரித்தானிய இந்திய, ஐரோப்பிய ஒன்றிய நாடுகளின் ஆசீர்வாதத்துடன் நோர்வேயின் எரிக் சொல்கைம் தொடக்கிவைத்த சமாதான முயற்சிக்கு முதற்படியாக விடுதலைப் புலிகள் அறிவித்த நான்குமாத ஒருதலைப்பட்ச யுத்தநிறுத்தமேயாகும். இந்த நல்லெண்ண சமிக்ஞையை தந்திர புத்தியுள்ள இலங்கை அரசு தனக்குச் சாதகமாகப் பாவித்து, தனது யுத்த களத்தை தயார்ப்படுத்தி 'அக்னி கீல' (தீச்சுவாலை) என்ற பெயரிட்டு பாரிய படை நடவடிக்கையை மேற்கொண்டது. இதுபோன்ற பல படை நடவடிக்கைகளினால் இலங்கை இராணுவம் விடுதலைப் புலிகளின் நல்லெண்ண சமிக்ஞையை உதாசீனம் செய்து அவர்களை அவமதித்தது. விடுதலைப் புலிகள் தாங்களே தங்களுக்கு விதித்துக்கொண்ட யுத்தநிறுத்த தர்மத்தின் மூலம் பல உயிரழிப்புகள் முதலாக அவர்கள் சந்திக்கநேரிட்டது. அதுமட்டுமல்ல வழமைபோல பல தமிழ்க் குடியிருப்புக்கள் பாழாக்கப்பட்டது.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக கடந்த ஆகஸ்ட் 12ஆம் திகதி 2001 சண்டே லீடர் என்ற ஆங்கிலப் பத்திரிகையில் வெளிவந்த செய்தி எம்மை அதிர்ச்சிக்குள்ளாக்கி இருக்கிறது.

அதாவது, சிறீலங்கா இராணுவம் இரகசியமான முறையில் PRO-A ஸ்மெல் ரொக்கட் என்ற இரசாயன ஆயுதத்தை கொள்வனவு செய்திருக்கின்றது என்பதேயாகும். அதைத் தொடர்ந்து வந்த செய்திகளான இராணுவப் பேச்சாளரின் உரை இக்கொள்வனவை உறுதி செய்திருக்கின்றது. இதைப்பற்றிய ஊழல்கள் வெளிவந்தன. படைகளின் அதி உயர் தலைவருமான, நாட்டின் அதிபரும் இதையெல்லாம் அறிந்திருந்தார். இவை எல்லாவற்றையும் சேர்த்துப் பார்க்கும்போது இந்நாட்டின் அதிகாரத்தில் இருப்பவர்களின் மேல் உள்ள நம்பிக்கை அற்றுப்போகின்றது. எதிரிடையாக ஆனால், இந்நாட்டின் ஊடகங்களின் வழமைப்படி இரகசிய கொள்வனவில் நடந்த ஊழல் பற்றி ஆர்ப்பாட்டம் செய்தனவே அல்லாமல், அந்த ஆயுதத்தின் பாவனையால் பாதிக்கப்படப்போகும் தமிழ் மக்கள் பற்றி மௌனம் சாதித்துவிட்டனர். இவ்வாயுதம் பாவிக்கப்படப்போகும் யுத்தகளத்தில் பாதிப்புக்குள்ளாகக்கூடிய தமிழர்களைப் பற்றி தற்செயலாகக்கூட குறிப்பிடாதது மட்டுமல்ல, தடைசெய்யப்பட்ட இந்த ஆயுதங்களைப் பாவிப்பது, பல சர்வதேச சட்டதிட்டங்களை மீறுவதைக்கூட இவைகள் குறிப்பிடவில்லை. இவை இரகசியமாக பெறப்பட்டதனால், சர்வதேச புலனாய்வு முகவர்களின் கவனத்தை ஈர்க்கவில்லை என்று எம்மால் நம்பமுடியாது. ஏனெனில், இதை ஒத்த பிரசம்பவங்களில் குறிப்பாக ஐ.நாவும் பரவலாக சர்வதேச சமூகமும் தடைகளும் கட்டுப்பாடுகளும் கொண்டுவந்ததை நாம் நன்கு அறிவோம்.

சமாதான முயற்சிகளில் ஈடுபடுவதாக வெளியே காட்டிக்கொண்டு இப்படியான கொடூரமான யுத்த குற்றச் செயல்களில் சிறீலங்கா அரசு ஈடுபடுவது தமிழ் மக்களை ஏமாற்றத்திற்கும், சினத்திற்கும் உள்ளாக்கி இருக்கின்றது. இதில் சர்வதேச சமூகம் மௌன பார்வையாளர்களாக இருப்பது மேலும் தமிழர்களின் சினத்தை அதிகரிக்கின்றது.

இலங்கை அரசு இரசாயன ஆயுதங்களை ஆயுத அட்டவணையில் சேர்த்துக் கொள்ளப்படுவது இதுதான் முதல் தடவையல்ல என்பதை நாம் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம். 1990 தொடக்கத்தில் சிறீலங்கா வான்படை 'நம்லம்' என்ற இரசாயனக் குண்டுகளை வீசி தமிழர்களையும் பாதுகாக்கப்பட்ட காடுகளையும் தமிழ் பிரதேசங்களில் அழித்ததை ஞாபகப்படுத்துகின்றோம். இத்தருணத்தில் சிறீலங்கா வான்படையின் கீழ்த்தரமான செயல்களையும் நாம் ஞாபகப்படுத்த விரும்புகின்றோம். பீப்பாய்களில் கழிவுப் பொருட்களை அடைத்து அவற்றை தமிழ்க் குடியிருப்புக்களின் மேல் யாழ்ப்பாணத்தில் குண்டுகளாகப் போட்டன. இதனால் ஏற்படக்கூடிய தொற்றுநோய்களைத் தடுப்பதற்காக இவற்றை அப்புறப்படுத்த யாழ். நகர சபைகளுக்கு பல நாட்கள் பிடித்தன.

அரச பேச்சாளர் சிறீலங்கா, இராணுவத்திடம் இரசாயன ஆயுதங்கள் இருக்கின்றன ஆனால் அவற்றைப் பாவிக்கப் போவதில்லை எனக் கூறியிருப்பது ஆச்சரியத்திற்குரியது. வெற்றுக்கஜானாவுடைய ஒரு ஒட்டாண்டி அரசாங்கம், தகைமையற்ற ஒரு இராணுவத்தை வைத்துப் போராடும் அரசாங்கம் சர்வதேச சட்டங்களையும் மீறி இரகசியமான முறையில் இந்த ஆயுதங்களை கொள்வனவு செய்து, தனது ஆயுதக் குதத்தில் அடுக்கியிருக்கின்றன வென்றால் அதனைப் பாவியாது அழகுபார்ப்பதற்கு என்று அரசு சொல்ல அதை நம்புவதற்கு தமிழர்கள் புத்தியற்றவர்கள் அல்ல.

சிங்கள-பௌத்த பேரினவாதம் மட்டுமே நிலைக்கும் மற்றவை எல்லாம் அழிந்தொழிந்து போகும் என்ற நிலைப்பாட்டை எமக்கு வெளிப்படுத்துகின்றது.

எனவே இவ்விடயத்தில் தலையிட்டு தமிழ் மக்களை இன அழிப்பிலிருந்து காப்பாற்றவும், அவர்களுடைய சுதந்திரத்தையும், தன்மானத்தையும் உறுதிப்படுத்தவும் ஆவன செய்யவேண்டுமெனவும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.

நன்றியுடன்,
தலைவர்,
அருட்பணி M.X. கருணாரத்னம்.

# 10ஆவது ஆண்டு நினைவாக ஓர் மீள்பார்வை

போராட்டமே வாழ்க்கையாக இருக்கும் எமது தமிழீழ சமூகத்தில் வறுமை பட்டினி, நோய், எழுத்தறிவின்மை, வேலையின்மை, இருப்பிட வசதியின்மை போன்றவற்றிற்குப் பலியாகும் மக்கள் ஏராளம். வன்முறையின் வடிவமாக இனங்காணப்பட்டு ஜோன் சோல்ரனர் என்ற சமாதான ஆய்வாளரினால் அமைப்புசார் வன்முறை (Structoral Violence) எனப்பெயரிடப்பட்ட இத்தாக்கங்கள் ஆண் பெண் வேறுபாடின்றி அனைவரையும் பலிகொள்வது உலகப் பொதுநிலை என்றாலும்கூட போராட்ட சமூகத்தில் இந்தப் பலிவாங்கல் சற்றுக் கூடுதலாக இருப்பது தவிர்க்க முடியாத தொன்று.

இந்த வன்முறைகளை தம்மாலான மட்டும் களையவேண்டும் என்ற கண் நோக்குடன் தமிழர் துயர் துடைக்க பணியாற்றும் தொண்டர் அமைப்புகள் பல. இதில் பெண்கள் நலனுக்காகப் பாடுபடும் ஒரேயொரு அரசசார்பற்ற நிறுவனம் என்ற பெருமையைப் பெறுவது பெண்கள் அபிவிருத்திப் புனர்வாழ்வு நிறுவனம் (Cwdr) என்ற அமைப்பாகும்.

மேற்கூறப்பட்ட அமைப்பு ரீதியான வன்முறையைக் களையும் முயற்சியில் குறும்

பரீதியாகவோ, சமூகரீதியாகவோ, தேசரீதியாகவோ உடல், உளத் தாக்கங்களுக்குப் பலியாகும் பெண்கள் சிறுவர்களுக்கு புனர்வாழ்வு வழங்கும் உன்னத நோக்கையும் கொண்டது. தாக்கப்படுதல், பாலியல் வல்லுறவிற்கோ, பாலியல் கரண்டல்கள், அச்சுறுத்தலுக்கோ உட்படுதல், சிறுவர் பாலியல் துஸ்பிரயோகம், கணவரால் கைவிடப்படுதல், ஆண்களால் ஏமாற்றப்படுதல் போன்ற நடத்தைசார் வன்முறையின் தாக்கத்திற்கு உட்பட்டு தெருவிற்கு வந்து

மனவளம் பாதிக்கப்பட்ட பெண்களுக்கான ஸ்கந்தபுரத்தில் இயங்கும் வெற்றிமனை, கணவனை இழந்த அல்லது கணவனால் கைவிடப்பட்ட பெண்களுக்குப் புனர்வாழ்வு வழங்கும் நோக்குடன் தொடங்கப் பெற்ற மலர்ச்சோலை, வறுமையின் கோரப்பிடியில் வாழ வழியற்று, படிக்கவும் முடியாமல் வீதிக்கு வந்துவிட்ட சிறுவர்களுக்காக இயங்கும் செந்தளிர் இல்லம், இராணுவக் கட்டுப்பாட்டுப்பிரதேசத்தில் பெற்றோரைக் கைவிட்டோ அல்லது இராணு

கொடுத்தல் போன்றவற்றை தனது நிதி வசதிக்கு ஏற்ப செய்து கொடுக்கின்றது.

இலாப நோக்கம் எதுவுமின்றி ஏழைகள் துயர் துடைக்கும் பணியொன்றையே தனது பிரதான இலக்காகக்கொண்டு இயங்கும் இவ்வமைப்பின் இன்னொரு இலக்கு வயோதிபர் இல்லம் ஒன்றைத் தொடங்குதல்.

மனித நேயமும் சமூகசேவையில் நாட்டமும் கொண்ட தமிழ்க் குடிமக்களின்

# பெண்கள் துயர்துடைக்கும் பணியில்
# பெண்கள் அபிவிருத்திப் புனர்வாழ்வு நிலையம்

விட்ட அபலைகளுக்கு வாழ்வளிப்பதே இதன் பிரதான இலக்காகும்.

பெண்களுக்கான சுயதொழில் வாய்ப்புக்களை உருவாக்கி அவர்களை தமது காலில் நிற்கச் செய்யும் நோக்குடன் தையல், காகித உற்பத்தி, தும்புவேலை, பப்படத் தொழில் போன்ற பல பயிற்சித் திட்டங்களை வருடாவருடம் நடைமுறைப்படுத்தி பெண்கள் சுயமாக வாழ வழிவகுத்த இவ்வமைப்பின் வேலைத்திட்டங்கள் பல.

வக்குண்டு வீசக்குப் பெற்றோரைப் பலிகொடுத்தோ ஆதரவற்று நிற்கும் இளம் பெண்களுக்காக இயங்கும் மேரி இல்லம் என்பன இந்நிறுவனத்தின் தன்னலமற்ற சேவையின் பிரதிபலிப்புகள்.

இதுதவிர சுழற்சிக்கடன் விவசாயத்தை ஊக்குவித்தல், வறுமைப்பட்ட சிறுவர்களுக்கான நிதி, பாடசாலைப் பாடக்கொப்பிகள் வழங்குதல், இடம்பெயர்ந்தோருக்கு இருப்பிடவசதியும் உணவு வசதியும் செய்து

பார்வை இந்நிறுவனத்தின் பாக்கம் திரும்பவேண்டும் இவர்களின் பணிகளை இவர்களது வேலைத்திட்டங்களுக்குச் சென்று பார்வையிட்டு இப்பணிகளின் உன்னதத் தன்மையை அவர்கள் உணர்ந்து தம்மால் இயன்றளவு உதவிசெய்ய முயல்வார்களெனில் வாழ வழியற்றுத் தவிக்கும் பல அபலைகளுக்கும் இந்நிறுவனம் தனது தன்னலமற்ற சேவையை வழங்கும் என்பது உறுதி.

## பி.பி.சி. தமிழோசை செய்தியிலிருந்து...

# இலங்கையில் அமைதி சமாதானம் இப்போது ஏற்படாவிட்டால் என்றுமே ஏற்படாது

### -சிறிலங்கா வர்த்தக சமூகம்

பி.பி.சியின் கொழும்புச் செய்தி முகவர் பிரான்சிஸ் ஹரிசன் 04-09-2001 அன்று வழங்கிய பேட்டி நிகழ்ச்சி

## தோல்கள்



கவிஞர் கரி ஆனந்தன்

# கப்டன் விந்திரன்- எழிலரசன்

மணலாறு, தமிழீழப் போராட்ட வரலாற்றில் அழிக்கமுடியாத அத்தியாயம். புலிச்சேனையை அரவணைத்த கங்காருத் தொட்டில். தமிழீழ விடுதலை என்ற அக்கினியைத் தன் மடி மீது வைத்துச் சீராட்டிய தாய். அக்கினியின் அத்திவாரமான எம் தலைவரைப் பொத்திவைத்த புனிதபூமி. எதிரியின் கணைகளையெல்லாம் தன் நெஞ்சில் தாங்கிய கவசம். குரங்குகளின் சில்மிசங்கள், நீரேரிகளின் மீது வெண்பூக்களைத் தூவியதுபோல் மிதக்கும் கொக்குகள், மனிதனைக் கண்டவுடன் தாவியோடும் மரைகள், மலைக்குன்றென அசைந்தோடும் மூர்க்க யானைகள், உயர்ந்த மரங்களில் தாவியோடும் மரஅணில்கள், தலைக்குமேல் குடைபிடிக்கும் பச்சையங்கள், அரணாகக் காத்துநிற்கும் கற்பாறைகள், திடீரென வெகுண்டெழுந்தோடும் காட்டாறுகள், இவைதான் எம் தலைவரை காத்துநின்ற இதயபூமி.

1989இன் இறுதிக்காலம். 'செஞ்சோலை' எனும் பெயர்சூடிய 5வது பயிற்சிமுகாம். இருநூறுக்கு மேற்பட்ட போராளிகளைப் புடம்போட்ட பாசறை. இப்பாசறையில்தான் விந்திரனும் பயிற்சி பெற்றான். குறுணைகளை ஒன்றாக்கிய முதல் மூன்று பிரிவுகளில் விந்திரனும் ஓர் குறுணை. சிறந்தபயிலுனன். சிறந்த ஒழுக்கசீலன். தன்திறமையால் பொறுப்பாளரின் கண்களைத் தன்பால் ஈர்த்தவன். அடிப்படைப்பயிற்சி முடிந்தகையோடு விசேட பயிற்சிக்குத் தெரிவானவன்.

ஒரு போராளியாக விந்திரனை நான் சந்தித்தது என் நினைவுகளுக்குள் [illegible] இன்னும் என் இதயத்தை நெருடுகிறது. 'அமுதகானம்' காட்டிலுள்ள ஒரு முகாமின் பெயர். காட்டிலுள்ள போராளிகளிற்கு உணவளிக்கும் அட்சயபாத்திரம். எம்முகாமிற்கான உணவை எடுக்கச்சென்றேன். அங்கு தான் விந்திரனையும் கண்டேன்.

'எங்கேயோ பார்த்த முகமாகக் கிடக்கு' உயிரில் கலந்திருந்த நினைவுகளை மீட்டியபோது மூளைத் திசுக்களைக் கசக்கினேன். அவன் சிரித்தபடி என்னை அணுகினான். பதினைந்து வயதுப் பால்முகம், பால்முகத்தில் கரிய சிறிய கண்கள். கண்களிலே [illegible] திறன். நிமிர்ந்த உறுதியான நடை. அவனது உடலத்தின் அசைவிலேயே விழுங்கியிருக்கும் அவனது ஆளுமை. மொத்தத்தில் அவனது தோற்றம் வசீகரமானது. என் மூளைச் செல்களின் போராட்டம் ஓய்ந்தது. அவன் யார் என்று அறிந்து கொண்டேன். இவன் வல்வெட்டித்துறைப் பொடியன்.

வல்வெட்டித்துறை. போராட்டத்திற்கு தீக்குச்சி கொடுத்த இடம். எத்தனையோ மாவீரர்களும் போராளிகளும் தவழ்ந்த கரையோர நகரம். எல்லாவற்றிற்கும் மேலாக எம் தலைவரைத் தாலாட்டிய தொட்டில். விந்திரனின் தொப்புள்க்கொடி உறவும் இங்குதான். 1974 சித்திரை மாதம் 19ம் திகதி இது விந்திரனின் பிறந்த நாள். அம்மா புவனேஸ்வரி அப்பா பஞ்சலிங்கம். இவர்கள் தங்கள் மகனுக்குச் சூட்டிய பெயர் பாலமுரளி. மூன்று அக்காமாருக்கு அடுத்ததாக இவன், ஒரு தம்பியும் உண்டு. ஆரம்பக்கல்வி சிவகுரு வித்தியாசாலை எனும் கல்விக்கூடம்.

வல்வெட்டித்துறை நகரத்தின் முதுகை இந்திய இராணுவச் சப்பாத்துக்கள் புண்ணாக்குவது வழமை. இராணுவம் இதயத்தைக் கிழித்துவிட்டுச் செல்லும். இரத்தம் பாய்ந்தோடும். அவ்விதயத்தின் சிறுசுகளுக்குள்ளிருந்து புலிவீரர் வெளிவருவர். மீண்டும் புலிவேட்டைக்கு இராணுவ அரக்கர் வருவர். தருணம் பார்த்திருந்தனர் புலிகள்.

1989ம் ஆண்டு ஆவணி மாதம் ஒரு நாள், அரக்கனின் பல் ஒன்று உடைந்து இரத்தம் வழிந்தது. உடனே 'வல்வைப் படுகொலை' எனும் கோரத்தாண்டவம் அரங்கேறியது. வல்வை நகரம் சுடுகாடாகியது. தீ நாக்குகள் நகரத்தைக் கரியாக்கின. விந்திரனின் இதயத் தீக்குச்சியிலும் ஒரு சிறுபொறி தெறித்தது. 'போராட்டமே எமை மீட்கும் மீட்பர்' போராட்டம் எனும் சிறகுக்குள் தன்னையும் புகுத்திக்கொண்டான். நடுக்கடலில் தத்தளிப்பவனுக்கு கட்டை கிடைத்தது போல் இவனுக்கு போராட்டம் எனும் கப்பல் கிடைத்தது. இ[illegible] கப்பற்றிக் கொண்டான்.



1990ம் ஆண்டு ஒரு நாள், 'மன்னாரில் [illegible] விசேட பயிற்சி முடித்து விட்டு அணியொன்று வந்திருக்கிறது' காற்று என் காதில் சேதி சொல்லிச் சென்றது. அவ்வணியில் விசேடபயிற்சி முடித்து விந்திரனும் ஒருவனாக வந்திருந்தான். [illegible] பட்டை தீட்டப்பட்டிருந்தது. என்னைக் கண்டதுமே அவன் முகம் பிரகாசமானது. அதே புன்னகை, அதே கண்கள். ஆனால் ஒரு வித்தியாசம், தோளிலிருந்த ஆயுதம் சிறியதாகத் தோன்றியது. [illegible] துளிர்த்த புற்கள் போல மீசையும் அரும்பியிருந்தது.

சகபோராளிகளிடம் என் வாயைக் கொடுத்தேன். விந்திரனின் திறமைகளைப் புகழ்ந்தார்கள். [illegible]

விந்திரன் அதிஷ்டக்காரன். எவருக்குமே அரிதில் கிடைக்காத பணி அவனைத் தேடிவந்தது. அவனது திறமைக்குக் கிடைத்த அரும்பணி எமது தேசியத் தலைவரின் மெய்ப்பாதுகாவலர் அணிக்குத் தெரிவானான். எல்லாத் திசைகளுக்கும் ஒரேநேரத்தில் வெளிச்சம் தருகின்ற எம் தலைவரின் நிழலில் தவழும் பாக்கியம்.

போராட்டத்தேர் முன்னோக்கிச் சென்றுகொண்டேயிருந்தது. இதுவரை காலமும் ஒரு சண்டைக்குக்கூட போகவில்லை எனும் கவலை அவனை வாட்டியது. பலவேகய II இராணுவ நடவடிக்கைக்கு எதிராகச் செல்லும் அணியில் விந்திரனும் ஒருவன். செய்தி இதயத்தை பூந்தளிரால் தடவியது. உயிரை பூவாய் வருடிச் சென்றது நுரையீரலுக்குள் இனிப்பூட்டிய காற்றுப் புகுந்தது.

இயக்கச்சி, எமக்குச் சாதகமற்ற நிலப்பரப்பு. 'ஓமர் முக்தார்' எதிரியை பாலைவனத்தில் எதிர்த்ததுபோல் சிறுசிறு பற்றைகளோடு [illegible]

[illegible] பயிற்சி முடிந்தவனுக்கு பாலும் பழமும் கிடைத்தது. விந்திரனும் கிடைத்த சந்தர்ப்பத்தைத் திறமையாகப் பயன்படுத்தினான். பலரது பாராட்டுக்களைப் பெற்றான்.

அவனது திறமை என்னும் மூலதனத்திற்கு மீண்டும் பரிசு எனும் 'லொட்டரி' விழுந்தது. தேசியத் தலைவரின் உதவியாளர்களில் ஒருவனாகத் தெரிந்தெடுக்கப்பட்டான். [illegible] மீது ஏறிநின்று துள்ளும் குழந்தை போல இவனது உயிரின் ஒவ்வொரு அணுக்களும் மகிழ்ச்சியில் துள்ளின. தலைவரின் [illegible]


[illegible]

எழிலரசனுக்கு ஓர் இலக்கை வேவு [illegible]

[illegible]

1995 ஐப்பசி மாதம் [illegible]

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive



# வீர வணக்கம்

23-08-2001 அதிகாலை கொக்குத் தொடுவாயில் மேற்கொள்ளப்பட்ட வெற்றிகரத் தாக்குதலில் நான்கு போராளிகளும் இரு தேசிய துணைப்படை வீரர்களும் வீரச் சாவடைந்துள்ளனர்.

**மேஜர் நாயகன்**
**பேரம்பலம் யோகேஸ்வரன்**
யாழ். மாவட்டம்.

**மேஜர் பாண்டிமுத்து,**
**பாலசுந்தரம் பிரதீபன்**
யாழ். மாவட்டம்.

**2ஆம் லெப். இளங்கீரன்**

# கிடைக்கப் பெற்ற மாவீரர்களின் பெயர்கள்

**முருகன் நாகரூபன்**
மன்னார் மாவட்டம்.

**2ஆம் லெப். மாதவன்**
**செல்வராசா நந்தகுமார்**
மன்னார் மாவட்டம்.

**தேசிய துணைப்படை வீரர்**
**லெப். காந்தரூபன்**
**சபாரத்தினம் காந்தரூபன்**
முள்ளியவளை.

**தேசிய துணைப்படை வீரர்**
**வீரவேங்கை சுதாகரன்,**
**வேலாயுதம் சுதாகரன்,**
முள்ளியவளை.

23.08.2001 யாழ். குருநகர் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரின் சுற்றிவளைப்பின்போது தமக்குத் தாமே குண்டை வெடிக்கவைத்து இருபோராளிகள் வீரச்சாவடைந்துள்ளனர்.

**லெப். இளங்குமரன்,**
**அன்ரனி அன்ரன் ஜோன்சன்**
யாழ். மாவட்டம்.

**2ஆம் லெப். நகுலன்**
**மரியாம்பூரம் யேசுதாசபூரம்**
மன்னார் மாவட்டம்.

26-08-2001 அன்று முகமாலையில் முன்னேற முயன்ற இராணுவத்துடனான மோதலின்போது மூன்று போராளிகள் வீரச்சாவடைந்துள்ளனர்.

**கப்டன் இளஞ்சுடர்**
**சுப்பிரமணியம் சிவராசா**
யாழ். மாவட்டம்.

**2ஆம் லெப். மன்னன்**
**சுந்தரலிங்கம் சிவகுமார்**
யாழ். மாவட்டம்.

**2ஆம் லெப். அறிவமுதன்**
**ஆரோக்கியசாமி**

**கமலஸ்போஸ்**
மன்னார் மாவட்டம்.

28-08-2001 அன்று முல்லைக் கடற்பரப்பில் ரோந்து வந்த சிறிலங்கா கடற்படையினரை வழிமறித்து மேற்கொண்ட தாக்குதலில் போராளியொருவர் வீரச்சாவடைந்துள்ளார்.

**வீரவேங்கை பூங்குன்றன்**
**பிரான்சிஸ் சூரியகுமார்**
முல்லைத்தீவு.

01-09-2001 அன்று பருத்தித்துறைக் கடற்பரப்பில் சிங்களக் கடற்படை நீருந்து விசைப்படகு மீதான ஊடுருவல் தாக்குதலின்போது போராளியொருவர் வீரச்சாவடைந்துள்ளார்.

**மேஜர் குமாரவேல் (மதி)**
**கிருஸ்ணபிள்ளை சிவகுமார்**
யாழ்ப்பாணம்.

இராணுவம் முன்னேறியது. அச்சுவேலி, புத்தூர்ப் பிரதேசம் பச்சையுடையானது. இதற்கு எதிராக ஒரு தாக்குதல். எழிலரசன் இத்தாக்குதலின்போது விழுப்புண்ணுற்றான். இத்தாக்குதலில் நினைத்த வெற்றியை எம்மால் பெறமுடியவில்லை. ஆனாலும் எதிரிக்கும் பெரும் சேதம் ஏற்பட்டது.

இதே மாதம் பதினேழாம் திகதி, சூரியக்கதிர் யாழ்குடாவைச் சுட்டெரித்தது. எழிலரசன் குணமடைந்தான். இவன் குறிபார்த்துச் சுடுதலில் மிகத் திறமை மிக்கவனாக இருந்தான். இவனது சூடுகள் அனேகமாக பத்துக்களுடனேயே உறவாடுவது வழக்கம். எப்போதாவது ஒன்பதுகளுடன் சம்பந்தம் வைத்துக்கொள்ளும். இத்திறமை இவனை வேறொரு பணிக்கு இட்டுச்சென்றது. குறுகியகாலப் பயிற்சி முடித்து ஒரு பதுங்கிச்சுடும் வீரனாக சூரியக்கதிரை சுட்டெரிக்கப் புறப்பட்டான். யாழ்நகரத்தின் தலைவாசலில் இராணுவம் வந்திருந்தது. நாவலர் வீதிச் சண்டை எழிலரசனின் திறமைகருச் சான்றானது. ஒரேநாளில் பல இராணுவத்தினர் எழிலின் துப்பாக்கிக்கு அடிபணிந்தனர்.

யாழ்குடாநாட்டின் இதயத்தை சப்பாத்துக்கள் நசித்தன. அன்றலர்ந்த தாமரை போலிருந்த யாழ்மண் அரக்கனின் காலடியில் கசங்கியது. தந்திரோபாயமாக புலி வீரர் வன்னிக்கு வந்தனர். எழிலரசனின் பணி வன்னியிலும் தொடர்ந்தது. மேலதிக பயிற்சிக்காக அனுப்பப்பட்டான். பயிற்சி என்பது அவனுக்கு அல்வா சாப்பிடுவதுமாதிரி. பதுங்கிச்சுடும் சூட்டுப்பயிற்சியின்போது அவனது சூடுகள் இலக்கை முத்தமிடத் தவறுவதில்லை. 'பட்டிருக்கும்' என்று அவன் கூறினால் அந்த ரவை கண்டிப்பாக மையத்தை ஊடுருவியிருக்கும். 'இது பிசகிவிட்டது' என்று அவன் கூறினால் இலக்கைப் போய்ப்பார்க்கத் தேவையில்லை. முன்கூட்டியே தன் சூடுகளை மதிப்பிடும்திறன் அவனுக்கேயுரியதாகும்.

வன்னியில் இவனது முதற்களம் ஓயாத அலைகள் நடவடிக்கையாகும். வெண்கலக்கடையில் யானை புகுந்தது மாதிரி முல்லைத்தீவு முகாம் சின்னாபின்னப்படுத்தப்பட்டது. இதில் எழிலுக்கு அதிகவாய்ப்புக்கள் கிடைக்கவில்லை. ஆனால் சத்ஜய நடவடிக்கையில் இவனது துப்பாக்கியிலிருந்து புறப்பட்ட பல ரவைகள் எதிரி இரத்தத்தின் சுவையை அறிந்துகொண்டன. சன்டைமும்முரமாக நடந்துகொண்டிருந்தது. இவனது நிலைக்கு அண்மையாக ஒரு போராளியின் உயிரற்ற உடல் வெம்பிலுக்குள் கிடந்தது. இவனது இதயத்தை குண்டுசி ஒன்று கீறிச்சென்றது. உயிர்பிரிந்தபின்பும் நண்பனின் உடல் வெம்பியில் வேகக்கூடாது. எறிகணைகளின் சீறலுக்கு மத்தியிலும் ஓடிச்சென்று அவ்வித்துடலை நிழலில் வைத்துவிட்டு வந்தான். பின் எப்பலவில் இவனது துப்பாக்கி ரவைகளைத் துப்பியது. எந்நேரமும் எதிரி இலக்குகளைத் தேடித்திரிவதே இவனது பொழுதுபோக்கு. காவலரணில் எதிரியின் தலைக்கறுப்பு, ஒரு சூடுதான், எதிரியின் 'கெல்மற்' சிவந்திருக்கும்.

நாட்காட்டி சுருங்கியது. 'ஜெயசிக்குறுய்' திடமான பெயரிட்டான் எதிரி. காவியுடுப்புக்காரர் நல்லநாள் பார்த்துக் கொடுத்தனர். வன்னியின் இதயத்தைக்கிழிப்பதே நோக்கம். 'வாங்கடா வழிமேல் விழிவைத்துள்ளோம்' புலிவீரரும் திடம் கொண்டனர். மரித்தவனைப்போல் வானொலிகள் வெற்றிமுழக்கமிட்டன. புலிகள் அழித்தனர். போர் முடிந்தது. பழம் பறிக்கும் நேரத்துக்காகக் காத்திருந்தனர் புலிகள். தாண்டிக்குளத்தில் முதல் தூண்டில். ரத்வத்தவின் வாய் கிழிந்தது. பெரியமடுவில் ஆப்பிழுத்த குரங்கானது.


எழிலரசன் படையணிக்கு மாற்றப்பட்டான். ஓர் அணியைப் பொறுப்பேற்றான். இவனது அணியும் திறமைமிக்கதாயிருந்தது. ஓமந்தையில் வந்து நின்றுபட்ட காயங்களுக்கு எதிரி பழுது பூசிக்கொண்டிருந்தான். 01.08.97 அன்று எதிரியின் காவலரண்கள் மீது புலிகள் ஏறிநடந்தனர். முதல் இரண்டு ஊடுருவல் தாக்குதலுக்கும் செல்லவில்லையென்ற ஆதங்கம் எழிலரசனிடம் இருந்தது. இத்தாக்குதலில் அவனது துப்பாக்கியிலும் நெருப்புப் பூத்தது. அழகுக்கு மயில், பேசுக்கு கிளி, தந்திரத்துக்கு நரி, இல்லையில்லை புலிவீரர், வேகத்துக்குச் சிறுத்தை, இல்லவேயில்லை இதற்கும் புலிவீரர், ஓமந்தையில் நிரூபணமாகிற்று. 'பொயின்ற் எல்லாம் பிடிச்சிட்டம். இப்ப கிளியர் பண்ணிக்கொண்டிருக்கிறம். ஆயுதங்கள் எல்லாம் நிறையக் கிடக்குது' எழிலின் குரல் ஓமந்தையில் கேட்டவண்ணமேயிருந்தது.

மழை பொழிவது மண்ணுக்குத் தன்னை அர்ப்பணிக்கவே. காற்று வீசுவது உலகம் உயிருடனிருக்கவே. மரங்கள் வாழ்வது உயிர்களை வாழவைக்கவே. மெழுகுதிரி தன்னை உருக்குவது உலகிற்கு வெளிச்சம் தரவே. புலிவீரர் வீழ்வது தமிழீழ விடியலுக்கே. கவிவரித்த சொல்லொன்று எழிலரசனின் அருகே வீழ்ந்து வெடித்தது. வெற்றியில் பூரித்திருந்தவனின் தலையை சிதறுதுண்டாக்கிற்று நாசகியது. ஓமந்தை மண்ணில் அவனது குருதி படர்ந்தது. தமிழீழக் காற்றோடு அவனது உயிர் கலந்தது.

மரணத்தால் உன் உயிரைத் திருடமுடிந்தது. உன் புன்னகையைப் பொலிவை அதனால் திருடமுடியவில்லை. உனது குரல், உனது குறும்பு என் இதயத்தில் இன்னும் பசையாய் ஒட்டியிருக்கிறது. எனக்குத் தாகமெடுக்கும் போதெல்லாம் இப்போதும் என் அருகில் நீரோடையாய் ஓடி வருகிறாய் நீ. உன்னை விதைகுழியில் வைத்து ஒருபிடி மண்போட்டேன். போட்டதும் கையைத் திறந்தேன். அதிலும் உன் முகந்தான். ஆயிரமாயிரம் மாவீரருடன் நிம்மதியாக நீயும் உறங்கு. மழையின் பயணம் மண்ணைத்தொடும் வரை ஓயாது. எமது பயணமும் தமிழீழம் காணும்வரை ஓயாது. ●

> மழை பொழிவது மண்ணுக்குத்
> தன்னை அர்ப்பணிக்கவே.
> காற்று வீசுவது உலகம் உயிருடனிருக்கவே.
> மரங்கள் வாழ்வது உயிர்களை வாழவைக்கவே.
> மெழுகுதிரி தன்னை உருக்குவது
> உலகிற்கு வெளிச்சம் தரவே.
> புலிவீரர் வீழ்வது தமிழீழ விடியலுக்கே.

அமுதசாகரன்











## ஜானக பெரேராவின் மெல்பேண் விஜயத்தை எதிர்த்து தமிழ் மக்கள் மாபெரும் ஆர்ப்பாட்டம்

